# ஆரம்பக்கல்வி




ஆரம்ப ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ. 3] [தனி இதழ் அணா 4

மலர் 23 } ஜூன் 1961 { இதழ் 6


# அளவுக்கு மீறிய அவசரம் வேண்டாம்!

"கல்வியாம் கல்வி! எதற்காக ஐயா கல்வி? யார் கேட்டார்கள் கல்வி வேண்டும் என்று?"--இப்படிக் கேட்கப்பட்ட நாட்கள் மறைந்து விட்டன.

"பள்ளிக்கூடமா திறக்கப் போகிறீர்கள்? வேறு வேலையில்லையா உங்களுக்கு? போங்க ஐயா போங்க. எங்கள் ஊருக்கு வேண்டாம் பள்ளிக்கூடம்"--இத்தகைய வார்த்தைகள் வீசப்பட்ட காலம் அழிந்து விட்டது.

"பிள்ளைகள் படித்து விட்டால் பெரியவர்களை மதிக்கமாட்டார்கள்--தெரியுமா? தெரிந்துமா பள்ளிக்கூடம் திறக்கப் போகிறீர்கள்?"--இப்படிப்பட்ட பொருத்தமற்ற வாதங்களை எழுப்புகின்ற அர்த்தமற்ற தைரியம் படைத்தவர்கள் இப்போது இல்லை.

நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால்—ஏன்—முப்பது ஆண்டுகளுக்கு முன்னால்கூட நம்முடைய நாட்டில் இப்படியெல்லாம் பேசியவர்கள் ஏராளமாக இருந்தார்கள். எந்த ஊரிலாவது புதியதோர் பள்ளிக்கூடம் திறப்பது என்றால், ஆமாம்—திறக்கத்தான் வேண்டும்—அதுதான் நியாயம்—அதுதான் தேவையான செயல் என்று கூறி ஆதரவு அளிப்பவர்கள் மிகச் சிலராகவும், பள்ளிக்கூடமா—நம்முடைய ஊருக்கா—என்ன அக்கிரமம்—ஏன் இந்த ஆணவம்—ஆகாது இந்த வீண் செயல் என்று முழக்கமிட்டு முட்டுக்கட்டை போடுபவர்கள் மிகப் பலராகவும் இருந்த நாட்கள் அவை. ஆர்வமும் ஆற்றலும் படைத்த சிலர் எப்படியோ வசதிகளைத் திரட்டி எவ்வாறோ துணிச்சலைப் பெற்றுப் பள்ளிக்கூடம் ஒன்றைத் திறந்து விட்டாலும் அந்தப் பள்ளியில் படிப்பதற்குப் போதுமான மாணவர்களைத் திரட்டுவதற்குப் படாத பாடு பட்டுத் தீரவேண்டியிருந்த காலம் அது. சுற்றுப்புறச் சிற்றூர்களுக்குச் சென்று, ஆங்காங்குள்ள பெற்றோர்களைக் கண்டு, "உங்கள் பிள்ளைகளை அன்பு கூர்ந்து பள்ளிக்கூடத்திற்கு அனுப்புங்கள்—இலவசமாகப் பலகை பலப்பம் தருகிறோம்—இலவசமாகப் புத்தகங்கள் தருகிறோம்—இலவசமாக உடையும் உணவும் தருகிறோம்." என்றெல்லாம் கெஞ்சிக் கெஞ்சிப் பேசிப் பிள்ளைகளைப் பள்ளிகளுக்குத் தேடித் திரட்டிவந்த நாட்கள் அவை.

ஆனால் இன்றோ? வருத்தத்திற்கும் வேதனைக்கும் உரிய இந்த நிலைமறைந்து பூரிப்புக்கும் பெருமைக்கும் உரிய நிலை பிறந்திருக்கிறது. எங்கள் ஊருக்கா—பள்ளிக்கூடமா—செச்சே—அது எதற்கு என்று கசப்போடு கேட்கப்பட்ட விபரீதமான சூழ்நிலை என்றோ ஓடி ஒளிந்து விட்டது. எங்கள் ஊருக்குத்தானே—பள்ளிக்கூடம்தானே மிக மிக அவசியம்—உடனே திறக்க ஏற்பாடு செய்யுங்கள் என்று ஆர்வத்தோடு கேட்கிற அருமையான சூழ்நிலை இப்போது நிலவுகிறது. எங்கு பார்த்தாலும், யாரைப் பார்த்தாலும், கல்விப் பொருளின் இன்றியமையாமை மறுப்பு ஏதுமின்றி ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இந்த நாட்களில் ஊருக்கு ஊர் பள்ளிக்கூடம் திறக்கப்படுகின்றது. கிராமத்திற்குக் கிராமம் கல்வி நீரோடை விரைந்து பாய்ந்து நலன் பல விளைக்கிறது. ஆண்கள்...பெண்கள், முதியவர்கள்...இளையவர்கள், செல்வம் படைத்தவர்கள்...வறுமை மிகுந்தவர்கள், செல்வாக்கு நிரம்பியவர்கள்-அது அற்றவர்கள் ஆகிய எல்லாச் சாராரிடத்திலும், எல்லாச் சாதியாரிடத்திலும், எல்லா மதத்தாரிடத்திலும், எல்லாக் கட்சியாளர்கள் இடத்திலும், கல்வியை வளர்க்க வேண்டும் என்கிற ஆர்வம், ஆசை, எழுச்சி, துடிதுடிப்பு பொங்கித் ததும்பி வழிகிறது இந்த நாட்களில்.

பெருமகிழ்ச்சிக்கு உரிய நிலை இது என்பதில் துளியும் ஐய மில்லை. மேலும் மேலும் பள்ளிக்கூடங்கள் திறக்கப்படுவதும், ஆயிர மாயிரமாகப் பிள்ளைகள் படிக்க முன் வருவதும், நம் நாடு முன்னேற் றப் பாதையில் முழுவேகத்தோடு சென்று கொண்டிருக்கிறது என் பதை எடுத்துக்காட்டும் எழில்மிகுந்த அறிகுறிகள் ஆகும். இத்தகைய இனிமையும் எழிலும் ஏற்றமும் சிறப்பும் மிகுந்த அறிகுறிகளைக் கண்டு மகிழாத உள்ளம் எப்படி இருக்கமுடியும்?

ஆனால் ஒன்று. புதிது புதிதாக ஆரம்பப் பள்ளிகளைத் திறப்பதும் எல்லாப் பிள்ளைகளுக்கும் எழுதப் படிக்கக் கற்றுக் கொடுப்பதும் மிக மிகத் தேவையான செயல்கள் என்பதில் யாருக்கும் எத்தகைய ஐயமும் இருக்கமுடியாது. யார் எந்தத் தொழிலைச் செய்தாலும், அந் தத் தொழில் எவ்வளவு எளியதாக இருந்தாலும், அவர் ஆரம்பக் கல்வியைப் பெற்றவராக இருக்கவேண்டியது இன்றியமையாதது ஆகும். ஒருநாடு வளமும் தெளிவும் படைத்ததாக அமையவேண்டு மானால் அந்த நாட்டில் உள்ள மக்கள் அத்தனைப்பேரும் எழுதவும் படிக்கவும் ஆற்றல் படைத்தவர்களாக இருக்க வேண்டியது அவசியத் திலும் அவசியமாகும். ஆகவே 5 முதல் 11 வயது வரை உள்ள பிள்ளை கள் அனைவருக்கும் கல்வி புகட்டுவதற்கும் தேவையான அளவு ஆரம் பப் பள்ளிக்கூடங்கள் திறக்கப்படுவது இன்றியமையாத செயலே ஆகும். ஆனால் புதிது புதிதாக ஆரம்பப் பள்ளிக்கூடங்களைத் தொடங்குகின்ற இதே வேகத்தில் உயர்நிலைப் பள்ளிகளையும் கலைக் கல்லூரிகளையும் தொடங்குவது நம்முடைய நாட்டின் இன்றைய நிலை யில் தேவையான செயல்தானா என்பதை நாட்டின் நலன் நாடும் நல்லறி வாளர்கள் அனைவரும் சற்றே எண்ணிப்பார்க்க வேண்டும்.

நாட்டில் உள்ள அத்தனைபேரும் ஆரம்பக் கல்வியறிவு படைத் தவர்களாக இருக்க வேண்டியது இன்றியமையாதது என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஆனால் நாட்டில் உள்ள அத்த னைப் பேரும் உயர் நிலைப் பள்ளி அறிவும் கல்லூரி அறிவும் பெற்றவர் களாக இருக்கவேண்டுமா என்று கேட்டால், வேண்டியதில்லை என் பதே நம்முடைய விடை. நல்லறிவாளர்கள் அனைவரின் விடையும் அதுவாகவே இருக்கும் என்று நாம் கருதுகிறோம்.

இந்தியா ஏழை நாடு. இந்தியாவில் உள்ள மக்கள்மட்டுமல்ல, இந்தியாவில் உள்ள அரசாங்கமும் ஏழ்மை நிறைந்த நிலையிலேயே உள்ளது என்பது யாவரும் அறிந்துள்ள உண்மை. மிகமிக இன்றிய மையாத தொழிற்சாலை அமைப்புத் திட்டங்களுக்குக்கூட, "திட்டம் தேவைதான்—தொடங்க வேண்டியது அவசியம்தான்—ஆனால் என் செய்வது—அதற்குத் தேவையான அளவு பணம் இல்லையே" என் கிற பல்லவியையே ஆட்சியாளர்கள் அடிக்கடி பாடித் தீரவேண்டிய

நிலையில் இந்த நாட்டு ஆட்சிப் பீடத்தின் பணநிலை இருக்கிறது. நிலைமை இப்படி இருக்கையில் எல்லாப் பிள்ளைகளும் உயர்நிலைக் கல்வியையும் கல்லூரிக் கல்வியையும் தருவதற்குத் தேவையான பணவசதியைத் திரட்டுவது சிறிதும் இயலாத செயலே ஆகும்.

அதுமட்டுமல்ல. இன்றைய நிலையில் நம்முடைய நாட்டில் உயர்நிலைப் பள்ளிக் கல்வியும் கல்லூரிக் கல்வியும் பெற்றுத் தேர்ந்து வெளியே வருகிற பிள்ளைகள் அத்தனை பேரும் ஏதாவது ஓர் அலுவலகத்தில் குமாஸ்தா வேலை கிடைக்காதா என்றே ஏங்கித் தவிக்கிறார்கள். உயர்நிலைப் பள்ளிக் கல்வியும், கல்லூரிக் கல்வியும் பெற்றவர்கள் மிகச் சிலராக இருந்த பழைய நாட்களில் அவர்கள் அத்தனை பேருக்கும் குமாஸ்தா வேலை எளிதில் கிடைத்து வந்தது. ஆனால் இன்றோ, நாட்டில் உள்ள குமாஸ்தா வேலைகளின் எண்ணிக்கையைவிட உயர்நிலைப் பள்ளிக் கல்வியும் கல்லூரிக் கல்வியும் பெற்றுள்ளவர்களின் எண்ணிக்கை மிக மிக் அதிகமாக இருப்பதால், அவர்களில் ஒரு சிலருக்கு மட்டுமே அத்தகைய வேலைகள் கிடைக்கின்றன. மற்றவர்கள் யாவரும் வேலை எதுவும் கிடைக்காமல் திண்டாடித் தவிக்கவேண்டிய பரிதாபகரமான நிலைமை நாட்டில் நிலவுகிறது.

இப்போது உள்ள கல்வித் திட்டத்தின்படி உயர்நிலைக் கல்வியும் கலைக் கல்லூரிக் கல்வியும் பெற்று வருபவர்கள் குமாஸ்தா வேலைகளைத் தவிர வேறு வேலைகள் எவற்றிற்கும் திறமை அற்றவர்களாகவே வெளியே வருகின்றனர். அப்படி வருகின்ற அவர்களுக்கு அந்த வேலைகள் கிடைக்காமற் போனதும் அளவுகடந்த சலிப்புணர்ச்சியும் வாழ்க்கையில் வெறுப்பும் இயல்பாக ஏற்படுகின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையில் புதிது புதிதாக, உயர்நிலைப் பள்ளிகளையும் கலைக் கல்லூரிகளையும் திறப்பதால் வேலையில்லாத் திண்டாட்டம் வளர்ந்து பெருகவும், வெறுப்பும் சலிப்பும் விரக்தியும் படைத்த வாலிபர்களின் எண்ணிக்கை உயரவும்தான் வழி ஏற்படுகிறதே தவிர நன்மை என்ன ஏற்பட முடிகிறது?

இந்த விபரீதமான நிலைமை திருத்தி அமைக்கப்பட வேண்டுமானால் கீழ்க்கண்ட ஏற்பாடுகளை ஆட்சியாளர்களும் இந்தத் துறைகளுக்குத் தொடர்புள்ள ஏனையோரும் மேற்கொள்ளவேண்டும் என்பது நம்முடைய கருத்து.

1. அடுத்துவரும் சில ஆண்டுகளுக்கு இன்றியமையாத காரணங்கள் இருந்தால் தவிர புதிய உயர்நிலைப் பள்ளிகளையோ கலைக் கல்லூரிகளையோ தொடங்கக் கூடாது.

2. ஆரம்பக் கல்வி அமைப்பின் இறுதிக்கட்டமாகிய ஏழாவது வகுப்பின் முடிவில் எல்லா மாணவர்களுக்கும் ஓர் அரசாங்கத் தேர்வு நடத்தப்படுதல் வேண்டும். அந்தத் தேர்வில் 35 சதவிகித மதிப்பெண்களுக்குமேல் பெற்றவர்கள் அனைவரும் அந்த வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்களாக அறிவிக்கப்படுதல் வேண்டும். ஆனால் 50 சதவிகித மதிப்பெண்களுக்குமேல் பெற்றவர்கள் மட்டுமே உயர் நிலைப் பள்ளிகளில் சேர்வதற்குத் தகுதி படைத்தவர்கள் என்று அறிவிக்கப்படுதல் வேண்டும்.

8. இதுபோலவே உயர்நிலைப் பள்ளியின் இறுதித் தேர்வாகிய எஸ். எஸ். எல். சி. தேர்விலும் 35 சதவிகித மதிப்பெண்களுக்கு மேல் பெற்றவர்கள் அந்த வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்களாக அறிவிக்கப்படுதல் வேண்டும். ஆனால் 50 சதவிகித மதிப்பெண்களுக்கு மேல் பெற்றவர்கள் மட்டுமே கல்லூரிகளில் சேர்வதற்குத் தகுதி படைத்தவர்கள் என்று அறிவிக்கப்படுதல் வேண்டும்.

4. ஆரம்பப் பள்ளி இறுதித் தேர்வில் வெற்றி பெற்ற—ஆனால் உயர்நிலைப் பள்ளியில் சேர்வதற்குத் தேவையான அளவு மதிப்பெண்கள் பெறாத மாணவர்களுக்கு, அவர்களுடைய அறிவுக்கும் ஆற்றலுக்கும் ஏற்ற முறையில், பல்வேறு தொழில்களைக் கற்றுத் தருகின்ற இளநிலை தொழிற் பயிற்சி நிலையங்கள் (Junior technical training schools) ஏராளமாக ஏற்படுத்தப்படல் வேண்டும். இந்தப் பயிற்சி நிலையங்களில் கற்றுத் தேர்ந்த பின்னர் அவர்கள் சொந்தமாகவோ அல்லது பிறரிடம் பணி செய்தோ, தமக்கென்று ஒரு தொழில் தேடிக்கொள்ளத் தக்க நிலையினராக உயர்த்தப்படுதல் வேண்டும்.

5. இதுபோலவே உயர்நிலைப் பள்ளி இறுதித் தேர்வில் வெற்றி பெற்ற—ஆனால் கல்லூரியில் சேர்வதற்குத் தேவையான மதிப்பெண்கள் பெறாத மாணவர்களுக்கு, அவர்களுடைய திறமைக்கும் வயதுக்கும் ஏற்ற முறையில் பல்வேறு தொழில்களைக் கற்பிக்கின்ற முதுநிலை தொழிற் பயிற்சி நிலையங்கள் (Senior technical training schools) ஏராளமாக உருவாக்கப்பட வேண்டும்.

6. வெறும் பி. ஏ., பி. எஸ்ஸி முதலிய கலைப் பட்டதாரிகளை உருவாக்கும் கலைக் கல்லூரிகளைத் தொடங்குவதற்கு மாறாகப் பல்வேறு தொழில்களில் பயிற்சி அளிக்கும் பலவகையான தொழிற் கல்லூரிகள் ஏராளமாகத் தொடங்கப்படுதல் வேண்டும். தற்போது கலைக் கல்லூரிகளின் எண்ணிக்கை மிக அதிகமாகவும் தொழிற் கல்லூரிகளின் எண்ணிக்கை மிகக் குறைவாகவும் இருக்கிறது. இந்த நிலை மாறி, தொழிற் கல்லூரிகளின் எண்ணிக்கை மிக அதிகமாகவும்

கலைக் கல்லூரிகளின் எண்ணிக்கை மிகக் குறைவாகவும் இருக்கும் புதியதோர் நிலை உருவாக்கப்படுதல் வேண்டும். இதுமட்டுமல்ல. தற்போது மருத்துவக் கல்லூரி, பொறி இயல் கல்லூரி, சட்டக் கல்லூரி, கால்நடை மருத்துவக் கல்லூரி, விவசாயக் கல்லூரி ஆகிய ஒரு சில துறைகளைச் சேர்ந்த தொழிற் கல்லூரிகள் மட்டுமே உள்ளன. இது போதாது. இன்றையதினம் உலகத்தில் எண்ணற்ற தொழில்கள் உருவாகியுள்ளன. அவற்றையெல்லாம் புகட்டத்தக்க வெவ்வேறு வகையான தொழிற் கல்லூரிகள் ஏராளமான அளவில் ஏற்படுதல் வேண்டும்.

நாம் குறிப்பிட்டுள்ள இந்த ஏற்பாடுகள் யாவும் நடைமுறைக்கு வருமானால், உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் உண்மையாகவே அந்தக் கல்வி நிலையங்களில் பயில்வதற்குத் தேவையான அறிவும் ஆற்றலும் தகுதியும் திறமையும் படைத்தவர்கள் மட்டுமே அங்கே சேர முடியும். அதனால் அங்கே தரப்படுகின்ற கல்வியின் தரமும் உயர்வடையும். குமாஸ்தா வேலைகட்காக அளவுக்கு மீறிய எண்ணிக்கை படைத்த மக்கள் அலைந்து திரிந்து வேதனைக்கு ஆளாகின்ற விபரீத நிலைமையும் ஏற்படாமல் இருக்கும்.

ஆரம்பப் பள்ளிக் கல்வி

உயர் நிலைப் பள்ளிக் கல்வி

கல்லூரிக் கல்வி

இந்த மூன்று வகைக் கல்வியைப் பெற்றுக் கல்வி நிலையங்களிலிருந்து வெற்றிப் புன்னகையுடன் வெளியே வருகிற மாணவர்களின் தன்மை, வகை, எண்ணிக்கை, ஆகியவற்றிற்கும், நாட்டில் உள்ள வேலை வாய்ப்புக்களின் தன்மை, வகை, எண்ணிக்கை ஆகியவற்றிற்கும் இடையே தற்போது எத்தகைய தொடர்பும் இல்லாமல் இருக்கிறது. இந்த நிலையை நீடிக்க விடக்கூடாது.

ஆரம்பக் கல்வியைக் கற்று வருபவர்களின் எண்ணிக்கைக்கும், அந்தக் கல்வியைக் கற்பவர்கள் பெறக்கூடிய வேலை வாய்ப்புகளின் எண்ணிக்கைக்கும் ஏறத்தாழ ஒத்த நிலை இருத்தல் வேண்டும்.

இது போலவே உயர்நிலைப் பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி ஆகியவற்றைக் கற்று வெளியேறுபவர்களின் எண்ணிக்கைக்கும், அத்தகு கல்வியைப் பெற்றோர் பெறக்கூடிய வேலை வாய்ப்புகளின் எண்ணிக்கைக்கும் கிட்டத்தட்ட சம நிலை இருத்தல் வேண்டும்.

சுருக்கமாகவும் தெளிவாகவும் கூறவேண்டுமானால், பல்வேறு கல்வி நிலையங்களில் அளிக்கப்படுகின்ற கல்விக்கும் அந்தக் கல்வியைப்

பெறுபவர்கள் பெறக்கூடிய வேலைகட்கும் இடையே நெருங்கிய தொடர்பும் இணக்கமும் இருத்தல் வேண்டும். இப்போது இந்த நிலை இல்லை. கல்வி நிலையங்கட்கும் வேலை வாய்ப்புகட்கும் இடையே எத்தகைய தொடர்பும் இல்லாமல் இருக்கிறது இதுபோது. விசித்திரமும் விபரீதமும் கலந்த இந்த நிலை எவ்வளவு விரைவில் மாற்றி அமைக்கப்படுகிறதோ அவ்வளவு விரைவில்தான், இந்த நாட்டில் அளிக்கப்படுகின்ற கல்வியின் தரம் உயரும்; வேலையில்லாத் திண்டாட்டம் குறையும்; வாலிபர் உலகில் வளர்ந்து ஓங்கிச் செழித்துப் பரவியுள்ள விரக்தி மனப்பான்மையும் அகன்று ஒழியும்.

இந்த உண்மைகளையெல்லாம் ஆரத் தீர எண்ணிப்பார்த்துத் தேவையான திட்டங்களையும் ஏற்பாடுகளையும் மேற்கொள்ளவேண்டியது ஆட்சியாளர்களின் தனிப்பெருங் கடமையாகும். இந்தத் துறையில் தங்கள் கவனத்தைச் சிறிதளவும் செலுத்தாமல், மேலும் மேலும் உயர்நிலைப் பள்ளிகளையும் கல்லூரிகளையும் தொடங்கிவைப்பதிலேயே ஆட்சிப் பீடத்தை அலங்கரிப்பவர்கள் தங்கள் கவனம் முழுவதையும் செலுத்திக் கொண்டிருந்தால், அதனால் அடுத்த பொதுத் தேர்தலில் அவர்களுடைய கட்சிக்கு வாக்குகள் கிடைக்கக்கூடும்—ஆனால் நாட்டிற்கு நலன் விளையாது.

ஆகவேதான்,

“ஆட்சியாளர்களே, உயர்நிலைப்பள்ளிகளையும் கல்லூரிகளையும் தொடங்குவதில் அளவுக்கு மீறிய அவசரம் காட்டாதீர்கள்—அப்படிக் காட்டுவதன் வாயிலாக வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓங்கி வளரச் செய்யாதீர்கள்” என்று அன்போடு கேட்டுக்கொள்ள வேண்டிய கடமை நமக்கு ஏற்பட்டிருக்கிறது.

நாம் சுட்டிக் காட்டும் இந்த மறுக்க முடியாத உண்மை, ஆட்சியாளர்களுக்கு மட்டுமல்ல, பொதுமக்களில்கூட சிலருக்குக் கசப்புணர்ச்சியை உண்டாக்கலாம். என்றாலும் உண்மை நிலைமையை உள்ளது உள்ளபடி எடுத்துக் கூறவேண்டியது நம்முடைய கடமை அல்லவா?

---

## உதிர்ந்த முத்து

உடல் உறுதி பெற வேண்டுமானால் தேகப் பயிற்சி செய்யவேண்டும். அதுபோலத்தான் உள்ளம் முழுமை அடைய வேண்டுமானால் கல்விப் பயிற்சி புரிய வேண்டும்.

—ரிச்சர்டு ஸ்டீல்

# வைட்டமின் சத்துக்கள்

(எஸ். எஸ். அஹ்மிஜா)

முதல் முதலாக 1880-ம் ஆண்டிலே லூனின் என்ற பெயருடைய விஞ்ஞானி, விலங்குகள் சேர்க்கை உணவு உண்டால் நன்கு வளரமாட்டா என்று ஆராய்ந்து கண்டார்.

1906—ல் ஸர் எப். ஜி. ஹாப்கின் ஸும் இதே உண்மையை நிரூபித்தார். அவர் எட்டு எலிகளுக்குச் சேர்க்கை உணவும், எட்டு எலிகளுக்கு இயற்கையான உணவும் அளித்துப் பரிசோதித்ததில், பதினெட்டு நாட்களின் பின்னர், முதலில் சொல்லப்பட்ட எலிகள் வளர்ச்சி அடையாது நின்றுவிட, பால் குடித்தவைகளோ கொழு கொழுவென வளர்ந்தன. பின்பு அவர் உணவை மாற்றினர். வளர்ச்சி தடையுற்ற எலிகள் இப்பொழுது நன்ருக வளரத் தொடங்கின. மற்றவை எடை குறைந்து, நருங்கலாய்ப் போயின.

இதன் பின்னர் வேறு பலரும் இப்பொருளை ஆராயலானர்கள். பால் போன்ற இயற்கை உணவுகளில், சேர்க்கைப் பொருட்களில் இல்லாததும் உடல் வளர்ச்சிக்கு அனுகூலமானதுமான சத்து ஒன்று இருக்கிறது என்னும் செய்தி மேல் மேலும் உறுதி பெற்றது. அக் காலத்திலேயே கிழக்குநாடுகளில் பெரிபெரி நோய் பரவலாக உண்டாகும் காரணம், அந் நாடுகளின் மக்கள் அரிசியை ஆலையில் அரைத்து, தவிடு போக்கி உட்கொள்வதேயாகும் என்றும், அரிசியைத் தீட்டுகையில், அதன் மேற்புறத்திலிருந்து ஏதோ ஒரு ஜீவாதாரமான சத்து அழிந்து போகும் போலும் என்றும் அறிஞர்கள் ஊகித்தார்கள். ஆனல் அச் சத்தை அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை.

இறுதியில் 1911—ல் ஃபங்கு (Funk) என்பவர் அரிசித் தவிட்டிலிருந்து ஒரு புதிய பொருளைப் பிரித்தெடுத்தார். சிறு அளவிலேயே அது கிடைத்தது. படிக வடிவமுடைய பொருள். அதற்கு வைட்டமின் என்று அவர் பெயர் சூட்டினர். அதுவே இப்போது வைட்டமின் பி என்று சொல்லப்படுகிறது.

அப்புறம் வேறு சில சத்துகளும் அகப்பட்டன. அவற்றிற்கு வைட்டமின் ஏ, வைட்டமின் பி1, வைட்டமின், பி2, வைட்டமின் பி6, வைட்டமின்ஸி, வைட்டமின் டி என்பன போன்ற பெயர்கள் இடப்பட்டுள்ளன.

வைட்டமின்கள் எப்பொருட்களால் ஆக்கப்பட்டவை என்பது நெடுங் காலமாகத் தெரியாமலிருந்

முழுமதிக்கு ஓரே வெறுப்பு. என்ன இது? எல்லாம் ஒன்றாகக் கூடிக் கொண்டு நம் தனிமைத் துயரைக் கிள்ளுகின்றனவே?

அவள் தன் விழிகளைத் தன் இல்லத்துத் தோட்டத்தில் மேய விட்டாள். அங்கே......

பன்னீர் மரங்களின் கீழே ஒரு ஆண் மானும், ஒரு பெண் மானும் ஓடி விளையாடிக் கொண்டிருந்தன. அந்தக்காட்சி அவளுக்குக்கொஞ்சம் ஆறுதலைத் தந்தது.

பெண் மான், ஆணின் பிடிக்கு அகப்படாமல் இப்படியும் அப்படியும் ஓடி ஆட்டம் காட்டிக் கொண்டிருந்தது. ஆணுக்கு ஓரே கோபம்— 'உன்னைப் பிடிக்க மாட்டேன்—போ' என்று சொல்வதைப் போல ஓரிடத்தில் நின்று கொண்டது. அதன் மனத்தை அறிந்த பெண் மான் திடீரென்று கால்தவறி விழுவதைப் போல பொத்தென்று விழுந்து வலி பொறுக்க முடியாததைப் போல பாசாங்கு செய்தது. அதை உண்மையென நம்பிய ஆண் மான் இதயம் பதறிப்போய் அதன் அருகே ஓடியது. ஆனால், தன் காதலனை ஏமாற்றிவிட்ட மகிழ்ச்சியால் அந்தப் பெண் மான் துள்ளி எழுந்து வேகமாக ஓடி, ஒரு சந்தன மரத்தின் கீழ் இருந்த நிழலில் நின்றது. அதன் செயலால் ஆண் மானுக்கு சினம் ஒன்றும் வரவில்லை. அதற்குப் பதிலாக, தன் காதல் மனைவி இவ்வளவு தூரம் ஊடல் செய்யக் கற்றுக் கொண்டதை எண்ணி எண்ணி மகிழ்ந்ததைப் போல இன்பமயக்கத்துடன் மெல்ல நடந்து சென்று, தன் துணையின் முகத்தோடு தன் முகத்தைப் பொருத்தியது.

மெய் மறந்து அந்தக் காட்சியில் உள்ளத்தைப்பறிகொடுத்துப் பார்த்துக் கொண்டிருந்த முழுமதியின் இதயத்தில் 'சுருக்' கென்றது.

ஆமாம் போன பௌர்ணமியன்று இதே விளையாட்டைத் தான் அவளும் அவள் உயிர்த் துணைவன் **முகில்வண்ணனும்** ஆடினர். அதோ—அந்த சந்தன மரத்தின் நிழலில்தான் அவளும் ஊடலுடன் நின்றாள். அவனும் அதை உணர்ந்து அவளுடைய மூச்சுத் திணறும்படி அவளை இறுகத் தழுவி......

அதற்கு மேல் நினைப்பதற்கு அவளுக்குவெட்கமாக இருந்தது. முகத்தில் துளிர்த்த வியர்வையைத் தன் பூந்துகிலால் துடைத்துக் கொண்டாள்.

பொல்லாத மான்கள்...... அன்று அவர்கள் விளையாடியதை மறைந்திருந்து பார்த்துக்கொண்டிருந்தனவா? அவள் கண்கள் ஆவலுடன் அந்த சந்தன மரத்தின் நிழலை மீண்டும் நோக்கின. அங்கே மான்களைக் காணவில்லை. ஆனால், மரத்தின் அருகில் இருந்த முல்லைப் பந்தரின் கீழே அவை அருகே படுத்து பால் நிலவை அநுபவித்துக் கொண்டிருந்தன!

முழுமதியின் உடல் புல்லரித்தது. அவள் இதயம் விம்மியது. அடிக்கடி நெட்டுயிர்த்தாள். அவள் கண்களிலிருந்து குபுகுபு வெனக் கண்ணீர்பொங்கி,பட்டுக் கன்னங்களில் வழிந்து, அவள் மார்பகத்தின் மீது பொட்டுப் பொட்டாக விழுந்து தெறித்தது.

தன் கணவன் முகில்வண்ணனை நினைத்துக் கொண்டாள். அவளை அறியாமல், அவள் இதயம் சோழப் பேரரசன் கிள்ளிவளவனைச் சபிக்கத் தொடங்கியது.

* * *

கரிகாற் பெருவளத்தானுக்குப் பிறகு உறையூரைத் தலைநகராகக் கொண்டு செங்கோல் ஓச்சிய சிறந்த பேரரசன் கிள்ளிவளவன்.

கிள்ளிவளவன் சிறந்த போர் வீரன். பெயர் பெற்ற அரசன். அழிவில்லாத கருவூரை அழித்தவன்; சேரனைத் தோற்கடித்தவன்; மலையமானைப் போர்க்களத்தில் வீழ்த்தியவன்.

வளவன்...! மென்மையான இதயம் படைத்தவன். இரப்போர்க்கு இல்லையென்னாது ஈபவன்!

வளவன்...! சிறந்த புலமையுடையவன். தானாகவே பாடல்கள் இயற்றுவதில் வல்லவன்! அவனுக்கு ஆவூர்மூலங் கிழார், ஐயூர் முடவனார், ஆலத்தூர் கிழார், ஆடுதுறை மாசாத்தனார், நல் இறையனார், கோவூர் கிழார், எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார் முதலிய நல்லிசைப் புலவர்கள் நண்பர்களாக இருந்தனர்.

கிள்ளிவளவன் கதிரவனிடத்தில் தண்ணொளியையும், சந்திரனிடத்தில் வெம்மையையும் உண்டாக்கும் ஆற்றல் உடையவன்!

இவ்வளவு சீரும் சிறப்பும் கொண்ட கிள்ளிவளவன் ஆட்சியில்தான்...முழுமதி போன்ற இள நங்கையர் தத்தம் கணவரைப் பிரிந்து தனிமைத் தீயில் வெந்து கொண்டிருந்தனர்.

அவர்களுடைய கணவன்மார் வெஞ்சிறையில் வாடினர். வதங்கினர்! ஏன் எனில்......

கிள்ளிவளவன், ஆட்சியில் கவனம் செலுத்தாது, தமிழ்க் கடலில் மூழ்கி, கவிதை முத்தெடுத்துக் களித்துக் கொண்டிருந்தான். மக்களை மறந்துவிட்டுப் புலவர்களுடன் அமர்ந்து பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தான். ஆகவே......,

சோற்றுக்குப் பெயர்போன சோழவள நாட்டில் பஞ்சப் பேய் களிநடம் புரிந்தது. அரசாங்கக் கருவூலத்தில் பொன்னும் பொருளும் குறைந்தது.

நிலைமையைச் சமாளிக்க முடியாமல் அமைச்சர்கள் வரி மேல் வரி போட்டனர். அளவுக்கு மீறிய வரிச் சுமையால் நாட்டு மக்களின் நெஞ்சம் ஒடிந்தது. வரிகட்ட இயலாதவர்கள், சிறையில் அடைக்கப்பட்டுச் சீரழிந்தனர். அப்படி

சிறைக்குச் சென்றவர்களில் முழு மதியின் கணவன் முகில்வண்ணனும் ஒருவன்!

நாடு இப்படிப் பஞ்சத்தில் தத்தளித்துக் கொண்டிருந்தும் கூட அரசனுக்கு நிலைமையை எடுத்துக் கூற அமைச்சர்களோ... வேறு யாருமோ முன் வரவில்லை. ஆனால் புலவர் வெள்ளைக்குடி நாகனார் மட்டும் பதைத்தார். அரசனை இடித்துக் கூறும் கடமையை மேற்கொள்ள வேண்டும் என்று முடிவு கட்டிக் கொண்டார்.

வெள்ளைக்குடி என்பது நாகனாரின் ஊர். எனவே, அவரை வெள்ளைக்குடி நாகனார் என்பார்கள். நாகனார் வேளாண் மரபில் வந்தவர். இரக்க நெஞ்சம் படைத்தவர்.

உறையூரிலிருந்து வெள்ளைக்குடிக்குச்சென்ற தண்டல் நாயகம் முறைப்படி நாகனாரைக் காணிக் கடன் கேட்டார். நாகனார் கடன் செலுத்த மறுத்தார். ஆகவே, புலவர் நாகனார் புலியாளும் வேந்தன் கிள்ளிவளவன் எதிரில் நிறுத்தப்பட்டார்.

மணிகள் அணி செய்யப்பட்ட அரியணையில் அமர்ந்திருந்த அரசன் கிள்ளிவளவன் கேட்டான்...

'இதென்ன புலவரே! காணிக் கடன் செலுத்த மறுக்கிறீராமே? நீவிர் புரட்சி செய்து வரிகொடா இயக்கம் ஒன்றையே உருவாக்கி விடுவீர் போலிருக்கிறதே!'

'தவறு மன்னா நீ சொல்வது! நான் உன்னுடன்...அதாவது இந்த நாட்டு அரசுடன் ஒத்துழைக்க மறுக்கிறேன். அவ்வளவுதான்!'

'ஓஹோ! ஒத்துழையாமை இயக்கமோ?'

அரசனின் கேலிக்கணை புலவர் உள்ளத்தைத் துளைத்தது.

'ஆம்! ஒத்துழையாமை இயக்கம்தான்! புதுமையான இயக்கத்தை யான் ஆரம்பித்துள்ளேன்! இதுவரை யாராலும் கையாளப்படாதது. யானே முதன் முதலாகக்கண்டு பிடித்தது. சோழர் வரலாற்றில் இது ஒரு புதிய அத்தியாயம். இதைப்புரட்டிப் பார்ப்போர் வெள்ளைக்குடி நாகனாரை அவ்வளவு சுலபத்தில் மறந்துவிட முடியாது. ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் வாழும் மக்களும் தமிழரின் அரசியல் நாகரிகத்தைக் கண்டு வியக்க வேண்டும். இப்படி ஓர் இயக்கத்தைப் புலவன் ஒருவன் அந்தக் காலத்திலேயே ஆரம்பித்தானும் என்று ஆச்சரியப்படவேண்டும்! அதற்குத்தான் நான் வரி கொடுக்க மறுக்கிறேன். உன் குற்றத்தை உனக்கு எடுத்துக்காட்ட வந்திருக்கிறேன்!'

மடை திறந்த வெள்ளம் போல் பாய்ந்து வந்த புலவரின் சொற்கள் அரசனைக் கதிகலங்கச் செய்து விட்டன.

'நான் ஒரு குற்றமும் செய்யவில்லையே புலவரே!'—அரசன் மனம் புழுங்கினான்.

'அரியாசனத்தில் இருந்து கொண்டே மக்களை மறந்து விட்டாய். நாட்டின் உயிர் நாடியை மறந்து விட்டாய். இதைவிட வேறு என்ன குற்றம் செய்ய வேண்டும்?' புலவர் கேட்டார்.

'நான் என்ன செய்ய வேண்டும்? விளக்கமாகச் சொல்லுங்கள்' அரசன் வேண்டினான். புலவரின் சீற்றம் தணிந்தது.

'வேந்தே! முழங்குகின்ற முரசம் உடைய மூவேந்தர்களிலும் சிறப்புடையவனே! வான் பொய்ப்பினும் தான் பொய்யாப் பொன்னிச் செல்வத்தை உடையவனே.

குடிமக்கள் குறைகேட்டு அவர்களுக்கு முறை வழங்குதல் உனது கடமையாகும். கண்ணைக் கவரும் வெண்கொற்றக் குடையின் கீழ், நீ அமர்ந்திருப்பது, வெயிலை மறைத்து நிழலை வேண்டி அல்ல. துன்பப்படும் மக்களின் துயரைத் துடைத்து, அவர்களுக்கு இன்பத்தை அளிப்பதற்கே ஆகும். நீ போரில் வெற்றி அடைந்து வாகை சூடுவதற்குக் காரணம், உனது நால் வகைச் சேனைகள் அல்ல. அந்த நால் வகைச் சேனைகளுக்கு உணவும் உணர்வும் கொடுக்கும் உழவர்களே ஆவர். வான்மழை தவறினும், தண் கடல் வற்றினும், இயற்கைக்கு மாறுபட்ட செயல் விளையினும் உலகம் அரசனையே பழிக்கும். இதனை நீ நன்குணர்ந்து, புறங் கூறுவோர் புன்மொழி கேளாது, ஏர் முனையால் பார் முழுவதையும் வாழவைக்கும் உழவர் குலப் பெருமக்களைப் பாதுகாத்து, பகைவர் உன் அடி பணிந்து போற்ற வாழ்வாயாக!'

வளவன் உய்யும் வழியைப் புலவர் கூறினார். மன்னன் மயக்கம் தெளிந்தான். நாட்டின் நிலையுணர்ந்து வருந்தினான். புதிதாகப் போட்ட வரிகளை நீக்கினான். வசூலித்த பொன்னையும் பொருளையும் திருப்பித் தந்தான். சிறையில் வாடியவர்களை விடுவித்தான். அவர்கள், 'வளவன் வாழ்க --வாழ்க புலவர் வெள்ளைக்குடி நாகனார்' என மனமார வாழ்த்திச் சென்றனர்.

* * *

பௌர்ணமிப் பால் நிலா தன் கதிரொளியால் அமுத மழை பொழிந்து உலக உயிரினங்களை இன்ப வாரிதியில் மூழ்கடித்துக் கொண்டிருந்தது.

முகில்வண்ணனும் முழுமதியும் தமது மாளிகைப் பூங்காவில் பளிங்குப் பாறை மீது அமர்ந்திருந்தனர். அறுபது தினங்களாக அடக்கி வைக்கப்பட்டிருந்த உணர்ச்சியலைகள் முழுமதியின் ஒவ்வொரு செயலின் துடிப்பிலும் வெளியிடப்பட்டது.

கடந்த பௌர்ணமியன்று அவளிடம் குறும்புத்தனம் செய்த தென்றலின் ஜம்பம் ஒன்றும் சாயவில்லை. பூங்காற்று, அவர்களிடையே நுழைந்து செல்ல முடியாமல் திக்குமுக்காடியது!

★

ஓரங்க நாடகம்

# செல்லக் குழந்தை

"முத்தமிழ்ப் பித்தன்"

## காட்சி 2

**கருணாகரர் :** வணக்கம் டாக்டர்.

**சந்திரன் :** வணக்கம். உட்காருங்கள்.

[கருணாகரரும் அவர் மனைவி கமலாவும் அமர்தல். கண்ணம்மா பையன் ரகுவைத் தூக்கி வந்து நாற்காலியில் உட்கார வைத்தல். டாக்டர் ரகுவைக் கூர்ந்து நோக்குதல்.]

**கரு :** டாக்டர், இவன் என் ஒரே மகன். நடக்கமாட்டான். நீங்கள் தான் முயற்சி செய்து எப்படியாவது இவனை நடக்க வைக்க வேண்டும்.

**சந்திரன் :** சுந்தரம் எல்லாம் விவரமாகச் சொன்னான். (ரகுவைப் பார்த்து) காலை நீட்டு.

[பையன் காலை நீட்டாமல் இருப்பதைக் கண்டு அவன் செவியில் உரக்கக் கூவுகிறார். பையன் காதைப் பொத்திக் கொள்ளுகிறான், ஓசை பொறுக்கமாட்டாமல். பின்பு டாக்டர் தாமே அவன் கால்களைப் பற்றிக் கொண்டு நீட்டி நீட்டி மடக்குகிறார்.]

**கரு :** பையன் ரொம்ப புத்திசாலி, டாக்டர். ஆனால் அவன் தலையெழுத்து இப்படி நடக்கமுடியாமல் ஆகிவிட்டது (பெருமூச்சு விடுதல்).

**சந் :** எப்போதிருந்து நடக்காமல் இருக்கிறான், சற்று யோசித்துச் சொல்ல முடியுமா?

**கரு :** (யோசித்துவிட்டு) மார்பால் தான் குழந்தையாக இருக்கும் போது தவழ்வான். நடந்ததாக நினைவில்லை. (கமலாவைப் பார்த்து) என்ன நான் சொல்வது?

**கமலா :** நான் கூட அவன் நடந்து பார்த்ததாக நினைவில்லை.

**சங் :** குழந்தைப் பருவத்தில் வலிப்பு ஏதாவது ஏற்பட்டதுண்டா ?

**கமலா :** அதெல்லாம் கிடையவே கிடையாது.

**சங் :** மாலை நேரத்தில் காய்ச்சல் வருவதுண்டா ?

**கரு :** அதெல்லாம் ஒன்றும் கிடையாது டாக்டர்.

**சங் :** (கண்ணம்மாவைக் காட்டி) இந்தம்மா பொறுப்பில் தானே குழந்தையை விடுகின்றீர்கள் ?

**கரு :** ஆமாம். சொந்தக் குழந்தை போல் பிரியமாகப் பார்த்துக் கொள்ளுவாள்.

**சங் :** ஏம்மா குழந்தையை எப்போதும் தூக்கி வைத்துக் கொண்டு தானிருப்பாயா ?

**கண்ணம்மா :** (கலவரத்துடன்) ஆமாமுங்க.

**சங் :** எத்தனை வருஷமாக நீ வேலை பார்க்கிறாய்?

**கரு :** (குறுக்கிட்டு) ஐந்தாறு வருடமாகிறது டாக்டர்.

**சங் :** (புன்முறுவலுடன்) மிஸ்டர் கருணாகரர் ஒன்றுக்கும் பயப்படாதீர்கள். நீங்கள் எல்லோரும் வீட்டுக்குப் போங்கள். பையன் இங்குதான் இருக்கட்டும், என் பொறுப்பில். அவனை நடக்கச் செய்வது என் பொறுப்பு.

**கரு :** சார், என் மகன் நடப்பானா? நிசமாகவே என் ரகு நடப்பானா டாக்டர்? அதைக் கண் குளிர நான் காண்பேனா ?

**சங் :** கருணாகரர், அதில் உங்களுக்குச் சந்தேகமா? நீங்களே அதைக் காணப் போகின்றீர்கள்.

**கரு :** என் வயிற்றில் பாலை வார்த்தீர்கள், டாக்டர். கமலா! கண்ணம்மா! நம்ப ரகு இனிமேல் நடக்கப்போகிறான், டாக்டர் சொல்லிவிட்டார்.

[கமலா ரகுவைச் சேர்த்து அணைத்துக் கொண்டு முத்தமாரி பொழிதல்.]

**சங் :** சரி நீங்கள் எல்லோரும் போய் வாருங்கள். நாளைக் காலை 8 மணிக்குச் சந்திக்கலாம்.

கரு : டாக்டர், பையனையும் கூட்டிக் கொண்டு போய் நாளை காலை அழைத்து வருகிறோம்.

சங் : கூடாது. பையன் இங்கேதான் இருக்க வேண்டும். நீங்கள் எல்லோரும் போய் நாளை வாருங்கள்.

கரு : நாங்கள் அவனை விட்டுப் பிரிந்ததே கிடையாதே டாக்டர்.

சங் : இப்போது பிரிந்து இருக்க வேண்டும்.

கரு : அவன் தனியாக இருக்கமாட்டான். அழுவான் டாக்டர்.

சங் : மிஸ்டர் கருணாகரர், உங்கள் மகன் நடக்க வேண்டும் என்ற ஆசை உங்களுக்கிருந்தால் அவனை இங்கு என் வசம் விட்டுப் போங்கள். இல்லையெனில் கூட்டிப் போங்கள்.

கரு : கோபித்துக் கொள்ளாதீர்கள். அவன் நடந்தால் போதும். அவனை விட்டுவிட்டே போகிறோம்.

கமலா : கூட கண்ணம்மாவும் இங்கே இருக்க அனுமதி கேளுங்களேன்.

சங் : முடியாது. பையன் மட்டும்தான் இங்கே இருக்க வேண்டும்.

கரு : சரி உங்கள் விருப்பப்படியே ஆகட்டும். ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள். அவனை இதுவரை தனியாக விட்டது கிடையாது.

சங் : செல்வக் குழந்தை. விட்டுப் பிரிந்து போவதென்றால் மனம் சிறிது வேதனை அடையத்தான் செய்யும். ஆனால் நான் அவனை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுகிறேன். அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம்.

கரு : சரி நாங்கள் விடைபெற்றுக் கொள்ளுகிறோம். வா கமலா. ரகு, உனக்குச் சாக்லெட் வேண்டுமா? நான் வாங்கிக் கொண்டு வருகிறேன். இங்கேயே இரு.

— திரை —

## காட்சி 3

கரு : ரகு இரவு தூங்குகிறானா இல்லையா, இப்போது என்ன செய்கிறான் என்பது ஒன்றுமே தெரியவில்லை. மணி 8 ஆகிறது. டாக்டரையும் காணோம். உனக்கென்ன தோன்றுகிறது? டாக்டர் சொன்னபடி ரகு எழுந்து நடப்பானா? ஒரு வேளை நடப்பான், நடப்பான் என்று ஆசை காட்டி.................

**கமலா :** உங்களுக்குக் கூட இது மாதிரி சந்தேகம் ஏற்படுவதைக் காண எனக்கு ஆச்சர்யமாக இருக்கிறது. (பூட்ஸ் ஒலி கேட்கிறது) அதோ டாக்டர் வருகிறார் போலிருக்கிறதே.

[டாக்டர் உள்ளே நுழைதல்.]

**கரு :** வணக்கம் டாக்டர்.

**சங் :** வணக்கம்.

**கரு :** ரகு தூங்குகிறானா டாக்டர். அவன் இப்போது எங்கே? இதுதான் முதல் தடவை. அவனை நாங்கள் விட்டுப் பிரிந்ததே கிடையாது. நாங்கள் நேற்று இரவு கண்ணயரவேயில்லை. ஏன் டாக்டர் அவன் நடப்பானல்லா? சொல்லுங்கள்.

**சங் :** அதில் உங்களுக்கேன் சந்தேகம். நடக்க வைத்துக் காட்டு கின்றேன். அவ்வளவுதானே உங்களுக்கு வேண்டியது. சரி, நீங்கள் இங்கேயே இருங்கள். பக்கத்து அறையில்தான் சிகிச்சை ஆரம்பிக்கப் போகிறேன். நீங்கள் இங்கு இருந்த படியே எல்லாவற்றையும் கவனிக்கலாம். இடையில் நீங்கள் இந்த அறையைவிட்டு வெளியே வந்தால், எல்லாம் கெட்டு விடும். ஒருவேளை உங்கள் பையன் இறந்துவிட்டாலும் இறந்துவிடக் கூடும். நான் மணியடிப்பேன் அதுவரை நீங்கள் இங்குதான் இருக்க வேண்டும். நான் சொல்லுவது விளங்குகிற தல்லவா?

**கமலா :** குழந்தை உயிருக்கு ஆபத்து ஒன்றும் வந்துவிடாதே, டாக்டர்.

**சங் :** (சிரித்தபடி) அதெல்லாம் ஒன்றுமில்லை. நான் சொன்னபடி நீங்கள் நடந்தால் எல்லாம் வெற்றிதான். சரி நேரம் ஆகிவிட் டது. நான் வருகிறேன்.

[டாக்டர் போகிறார்.]

— திரை —

## காட்சி 4

**ரகு :** "பசிக்கிறது டாக்டர், பசி தாள முடியவில்லை. அப்பா சாக்லேட் வாங்கித் தருகிறேன் என்று சொல்லி என்னை ஏமாற்றிவிட்டுப் போய்விட்டார். அம்மாகூட காணோம். தின் பதற்கு ஏதாவது தாருங்கள் டாக்டர். இரவு கூட நான் ஒன்றும் சாப்பிடவில்லை.

**சங் :** பசித்தால் பசிக்கட்டும்.

**ரகு :** தின்பதற்கு ஏதாவது தாருங்கள் டாக்டர், பசிக்கிறதே. கண்ணம்மாவைக் கூட காணவில்லை. என்னை என் அம்மாவிடமாவது கொண்டு விட்டுவிடுங்களேன்..........டாக்டர் ஏன் பேசமாட்டேனென்கிறீர்கள் ஐயோ பசி, பசி தாள முடியவில்லையே (அழுகிறான்).

**சங் :** உஸ், ஏன் அழுகிறாய். இங்கே சப்தம் போடக் கூடாது. அழுதால் ஊசிபோட்டு விடுவேன்.

[ரகு வாயை மூடிக் கொண்டு தேம்புகிறான்].

**சங் :** ரகு, உண்மையாகவே உனக்குப் பசிக்கிறதா?

**ரகு :** இராத்திரி பிடித்து நான் ஒன்றுமே சாப்பிடவில்லை.

**சங் :** ரகு உனக்குப் பகோடா பிடிக்குமா?

**ரகு :** ஓ, ரொம்ப பிடிக்குமே, எங்கே கொடுங்கள். (மூச்சை இழுத்து) டாக்டர் பகோடா வாசனை மூக்கைத் துளைக்கிறதே. நாக்கில் நீர் ஊறுகிறதே. பகோடா டாக்டர்.

**சங் :** உனக்குப் பகோடா பிடிக்குமென்று கண்ணம்மா சொன்னாள். உனக்காகவே பகோடா வாங்கி வைத்திருக்கிறேன். அதோ அந்தத் தட்டில் இருக்கிறது. வேண்டிய மட்டும் நீ எடுத்துச் சாப்பிடலாம்.

**ரகு :** டாக்டர், நீங்கள் ரொம்ப நல்ல டாக்டர். ம் அதை எடுத்துத் தாருங்கள்.

**சங் :** எடுத்துத் தர உனக்கு ஆள் வேண்டுமா? செல்லமாக வளர்த்தாயல்லவா, உனக்கு எடுத்துத்தர ஓர் ஆள் தேவைப்படுகிறது.

**ரகு :** ஐயோ, பசிக்கிறதே. கண்ணம்மா எங்கே தொலைந்தாள். எல்லாரும் என்னை ஒண்டியாக விட்டுவிட்டுப் போய்விட்டார்கள்.

**சங் :** ரகு, பகோடா ஆறிவிடுகிறது. மெள்ள எழுந்து சென்று எடுத்துச் சாப்பிடு.

**ரகு :** நான் நொண்டி டாக்டர். முடிந்தால் நான் உங்களைத் தொந்தரவு செய்யவே மாட்டேன். இந்நேரம் நானே எடுத்துத் தின்று ஏப்பம் விட்டிருப்பேன்.

**சங் :** ரகு நீ நொண்டியென்று யார் சொன்னது? அது சுத்தத் தப்பு. எழுந்து நடந்து பாரேன். ராஜா மாதிரி நடை போட்டு நடப்பாய்.

ரகு : நிஜமாகவா டாக்டர்?

சந் : (புன்சிரிப்புடன்) ம்.

ரகு : இதுவரை நான் நடந்ததே கிடையாது. வேண்டியதெல்லாம் அம்மாவும். கண்ணம்மாவும் எனக்கு இடம் தேடி வந்து தருவார்கள்.

சந் : அதுதான் தவறு; உன் உணவை நீயே பிறர் உதவியின்றி எடுத்து உண்ண வேண்டும். எழுந்திரு. வேண்டுமானால் என்னைப் பிடித்துக் கொள். எங்கே எழுந்து நட பார்க்கலாம்.

[சந்திரன் ரகுவின் கைகளைப் பிடித்துக் கொள்ளுகிறார். ரகு மெதுவாக எழுந்து நிற்கிறான். அவன் கால்கள் நடுங்குகின்றன].

ரகு : முடியவில்லையே, டாக்டர்.

சந் : உஸ் பேசாதே, உன்னால் முடியாததொன்றுமில்லை. ம் தைரியமாக எழுந்து நட.

ரகு : பயமாக இருக்கிறதே டாக்டர்.

சந் : நீ ஏன் பயப்படுகிறாய்? நான்தான் உன்னைப் பிடித்துக் கொண்டிருக்கிறேனே. பயப்படாதே. நடந்து வந்தால்தான் உனக்குப் பகோடா; இல்லையென்றால் பசி பசியென்று கதற வேண்டியதுதான். ம் சீக்கிரம் நட.

ரகு : என்னை விட்டுவிடாதீர்கள் டாக்டர் (ரகு மெதுவாக நடக்க முயற்சிக்கிறான்) இவ்வளவுதான். என்னவோ பிரமாதப்படுத்தினாயே. அதேபோல ஒவ்வொரு காலாக ஊன்றி நட, பலே, நன்றாக நடக்கக் கற்றுக் கொண்டுவிட்டாயே? என்னால் நடக்க முடியாது அப்படி இப்படியென்றாயே அவையெல்லாம் சுத்தப் பாசாங்குதானே? இவ்வளவு தூரம் வந்தாகிவிட்டது. இன்னும் சில அடிதான். நட, நட, நட, அவ்வளவுதான். கெட்டிக்காரனடா நீ. உன் பசி அடங்கு மட்டும் பகோடா சாப்பிடு.

("டணார்" என்று மணியடிக்கப்படுகிறது. கருணாகரர், கமலாவுடன் வேகமாக ஓடி வருகிறார்.]

சங் : மிஸ்டர் கருணாகரர், உங்கள் மகன் ஏதோ நொண்டி என்றீர்கள். இதோ பாருங்கள் எவ்வளவு தூரம் நடந்து வந்திருக்கிறான் என்று.

ரகு : அம்மா நான் நடக்கத் தெரிந்து கொண்டுவிட்டேம்மா! இல்லையா டாக்டர்? இனிமேல் நான் நடப்பேன். என்னை நொண்டி நொண்டி என்று யாரும் சொல்லக் கூடாது.

சங் : இனி அந்த நொண்டிச் சாக்கு செல்லுபடியாகாது. ரகு: தண்ணீர் வேண்டுமானால் குடி, நெஞ்சை அடைக்கப் போகிறது. அப்பாவுக்கும் அம்மாவுக்கும் நடந்து காட்டு பார்க்கலாம்.

[ரகு யாருடைய உதவியுமின்றி மெதுவாக நடக்கிறான்].

கரு : டாக்டர் என் வயிற்றில் பாலை வார்த்தீர்கள் டாக்டர். இருண்ட என் வாழ்வில் இன்றுதான் ஒளி ஏற்பட்டது.

[கமலா ரகுவை மார்போடு சேர்த்து அணைத்து முத்தமிடுதல்].

சங் : மிஸ்டர் கருணாகரர், ரகுவை வீட்டுக்கு நடத்தியே கொண்டு போகலாம். தினசரி மீனெண்ணெய் இரண்டு கால்களுக்கும் தடவி வாருங்கள். யாராவது அவன் கையைப் பிடித்துக் கொண்டு அவனை நடக்கச் செய்ய வேண்டும். சில நாட்களில் யாருடைய துணையுமின்றி அவனே நடப்பான்.

கரு : டாக்டர், இத்தனை நாள் அவன் ஏன் நடக்காமலிருந்தான்? இன்று எப்படி நடக்கிறான்?

சங் : (சிரித்தபடி) எல்லாவற்றிற்கும் காரணம் நீங்கள்தான்.

கரு : நானா?

சங் : ஆம் நீங்கள்தான். ரொம்ப செல்லமாக நீங்கள் அவனை வளர்த்து விட்டீர்கள். பணக்காரர் என்ற காரணத்தால் தூக்கி வைத்துக் கொள்ள ஓர் ஆளை நியமித்து, ஓடியாடக் கூட வாய்ப்பளிக்காமல் வளர்த்துவிட்டீர்கள். பணம் அப்படி செய்யச் செய்தது. அதன் விளைவு உங்கள் குழந்தை நடக்கும் கலையே பயிலாமல் போய்விட்டது. நீங்கள் நொண்டி என்று நினைத்துக் கொண்டீர்கள். உண்மையில் நொண்டி அவன் அல்ல; உங்கள் மனப்பான்மைதான். இனிமேலாவது தினசரி நடக்கப் பழக்குங்கள்.

ரகு : அம்மா, அப்பா, நீங்கள் இருவரும் என் கையைப் பிடித்துக் கொள்ளுங்கள். நான் வீட்டிற்கு நடந்தே வரப் போகிறேன்.

[ரகு அப்பா அம்மா இருவர் கையையும் பிடித்துக் கொண்டு நடை போடுகிறான். மூவரும் பூரிப்படைகின்றனர்.]

— திரை —

முற்றும்

# காலத்தை வென்ற கவியரசர்

[சடையப்பன்]

தமது இனிய கவிதைகளினால் உலக மக்களின் மனத்தைக் கவர்ந்தவர் தாகூர். இந்தியாவின் கவிதை மரபு இவர் இயற்றிய கவிதைகளினால் மேல் நாட்டாருக்குத் தெரிய வந்தது.

கவியரசர் தாகூரை மகாத்மா காந்தியடிகளே தமது குருதேவர் என்று பாராட்டினார் என்றால் இவரது பெருமையைக் குறித்து வேறு சொல்லவும் வேண்டுமா?

சாதி, சமயச் சண்டைகள் ஒழிந்து, மனத் தூய்மையும் சமாதானமும் உலகில் நிலவவேண்டுமென்று விரும்பியவர் கவியரசர். அவருடைய கவிதைகளெல்லாம், அவர் கொண்டிருந்த உயர்ந்த இலட்சியங்களை நமக்குத் தெளிவாகத் தெரிவிக்கின்றன.

ரொமெய்ன் ரோலந்து என்ற பிரபல பிரஞ்சு ஆசிரியர், கவியரசர் தாகூரையும் காந்தி மகாத்மாவையும் இவ்வுலகின் நன்மைக்காக ஆண்டவனால் அனுப்பப் பெற்ற தெய்வதூதர் என்று புகழ்ந்து கூறியுள்ளார். கவியரசர் பாடிய "ஜனகண மன அதிநாயக ஜயஹே" என்ற பாட்டு இன்று தேசியப் பாடலாகத் திகழ்கிறது.

கவியரசர் தாகூர் கவிதை புனைவதோடு மட்டும் நின்றுவிடவில்லை. கட்டுரைகள், கதைகள், நாடகங்கள் போன்ற உயர்ந்த இலக்கியப் படையல்களை சிருஷ்டி செய்த சிறந்த எழுத்தாளராவர்.

## இளமைப் பருவம்

கவியரசர் அவர்கள் ஜொராசங்கோப் பகுதியிலுள்ள கல்கத்தாவிலே தேவேந்திர நாத் தாகூருக்கும், சாரதா தேவிக்கும் 1861-ம் வருஷம் மே மாதம் 7-ம் தேதி பதினான்காவது குழந்தையாகப் பிறந்தவர்.

கவியரசரின் இளமைப் பருவத்திலே கல்கத்தா ஒரு சாதாரண நகரமாகவே இருந்தது. இன்று இருக்கும் டிராம், மோட்டார் போன்ற நவீன வாகனங்கள் ஒன்றும் அக்காலத்தில் இல்லை. ஆனால் எலும்பும் தோலுமாக இளைத்துக் காணும் குதிரைகள், தங்கள் மேலே விழும் அடிகளைத் தாங்க முடியாமல் அங்கும் இங்கும் தாறுமாறாக வண்டிகளை இழுத்துச் செல்லும் காட்சிகளைக் காண்பாராம் தாகூர். அக்காட்சி கவிஞரின் இளம் உள்ளத்தைப் புண்படுத்துமாம்.

## கல்விப் பயிற்சி

கவியரசர் பள்ளிக்குச் சென்று படித்தது மிகச் சொற்பமே. அவர் ஆரம்பப் பள்ளியில் தாய்

மொழியை ஓரளவு எழுதப் படிக்கத் தெரிந்ததும் அவருக்குப் புராண இதிகாசங்களின்மீது அதிக அவா உண்டானது. அதனால் தனது ஆசிரியர் பிரஜேஸ்வரர் என்பவரோடு ஒவ்வொரு மாலையிலும் விளக்கின்முன் உட்கார்ந்து இராமாயணம், மகா பாரதம் போன்ற கதைகளைச் சலியாது வாசிப்பதுண்டு.

வங்க மொழியில் புராணக் கதைகளை எழுதியவர்களில் சிறந்தவர்கள் கிருத்திவாசவர், வித்தியாசாகரர் என்பவர்களாவர். இவர்களுடைய பாடல்கள் மிகப் பெரியனவாயிருப்பினும் அவைகளின் உட்கருத்துக்களைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆசை, கவிஞரின் பெரும் சிரமங்களையெல்லாம் விரட்டிவிடுமாம்.

பாடசாலை வாழ்வு குறித்து அவர் மனதில் ஒரு கசப்பான எண்ணமே குடிகொண்டிருந்தது. காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரையிலும் மாணவர்கள் எந்த வகையான சுதந்திர உணர்வுமின்றிக் கட்டுப்பட்டிருக்கும் ஒரு சிறை வீடு என்றே பாடசாலையை எண்ணினார்.

## கவிதை உள்ளம்

எட்டு வயதிலேயே தாகூருக்குப் பாடல் இயற்றுவதில் ஆர்வம் பிறந்துவிட்டதாம். சுமார் பத்து வயது பிராயத்திலெல்லாம் அசைசீரோடு, எதுகை மோனை வைத்துப் பாடல்கள் எழுத ஆரம்பித்துவிட்டாராம் கவிஞர். கைலாசம் என்ற ஒரு பழைய குமாஸ்தா தாகூருக்குக் கவிதை எழுதுவதில் ஊக்கம் கொடுத்து வந்தார். அவருடைய மூத்த சகோதரரான துவிஜேந்திரரும், ஐந்தாவது சகோதரரான ஜ்யோதியிந்திரரும் அவர் கவிதையைப் போற்றி வந்தனர்.

தனது மைந்தனின் திறமையைக் கண்ட தேவேந்திரநாத் தாம் செல்லும் பிரயாணங்களில் ரவீந்திரரையும் உடன் அழைத்துச் செல்லத் தொடங்கினார். கங்கையில் மிதந்து செல்லும் படகுகளிலே தம் மகனையும் உடனிருத்தி அடிக்கடி பிரயாணம் செய்தார். நதியின் இரு கரைகளிலும் நிறைந்துள்ள இயற்கைக் காட்சிகளையும், நீரில் நீந்தித் திரிந்த பலவகை மீனினங்களையும், ஆகாயத்தில் பாடிப் பறந்த பறவையினங்களையும் கண்டு களித்தார் கவிஞர்.

பரந்த ஆகாயத்தில் நீல வானமும், அதில் குறுக்கும் நெடுக்குமாகச் சஞ்சரிக்கும் மேகமும், இரவு வேளைகளில் கொட்டிச் சிரிக்கும் பூமதியின் பால் ஒளியும், மின்னும் தாரகையும் கவிஞரின் உள்ளத்தை வெகுவாகக் கவர்ந்தன. இத்தியாதி இயற்கைக் காட்சிகளெல்லாம் தாகூரின் கவிதை உணர்ச்சிக்கு உயிரூட்டி வந்தன.

## ஆரம்பக் கவிதைகள்

தாகூர் அவர்கள் முதல் முதல் எழுதிய கவிதைகள் குடும்பத்திற்குள் மட்டும் தெரியும்படியா

யிருந்தன. சிறிது காலத்திற்குப் பின் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட "ஞானஸ்குரம்" என்ற மாதப் பத்திரிகையில் தாகூரின் கவிதைகள் வெளிவரலாயின. இப்பத்திரிகைக்குத் தவருது கவிதை தானம் செய்து வந்தார் தாகூர். கவிதைகளேயன்றி, ஆராய்ச்சிக் கட்டுரைகளும் எழுதி வந்தார். இப்பத்திரிகைதான் முதன் முதலாகக் கவிஞரின் முயற்சிகளை எங்கும் பரப்பி வந்தது

தன்னுடைய பாடல்களைப் பானுசிஸ் என்ற புனை பெயரில் வெளியிட்டார் கவிஞர். அவருடைய பாடல்களின் உள்ளடக்கத்தைப் புரிந்த பலரும் தாகூரை ஒரு பெரும் புலவர் என்றே கருதினர்.

ரவீந்திரநாது தமையனர் "பாரதி" என்ற ஒரு பத்திரிகையைப் புதிதாக அச்சமயம் தொடங்கினர், தாகூரின் கவிதைகள், நாடகங்கள், இலக்கிய விமரிசனங்கள், நூலாராய்ச்சிக் கட்டுரைகள் முதலிய பலவகையானவிஷயங்கள் இப்பத்திரிகையில் இடம்பெற்று வந்தன. மேலும் ஐரோப்பிய இலக்கியம் பற்றியும் இத்தாலிதேசத்துக் கவிஞர்களைப் பற்றியும் எழுதி வந்தார் தாகூர்.

வங்க மொழியில் சரித்திரக் கதைகள் எழுதுவதில் புகழ் பெற்ற பங்கிம் சந்திரர் தாகூரின் கவிதைகளை வாசித்து ஆச்சரியமடைந்தார். தாய் மொழிக்குச் சிறப்புத் தரும் கவிதைகளைக் கண்ட அவர் சிறுவர் ரவீந்திரரைப் பாராட்டிக் கௌரவித்தார். அதே சமயத்தில் சிலர், அவர் கவிதைகளை ஒப்புக் கொள்ளாது குறை சொல்லவும் முற்பட்டனர். அதனுல் அவரின் உள்ளம் ஒன்றும் தளர்ந்துவிடவில்லை.

## சீமை செல்லுதல்

தாகூருக்குப் பதினேழு வயது நிரம்பியதும் படிப்பின் பொருட்டு இங்கிலாந்துக்கு அனுப்பக்குடும்பத்தார் எண்ணினர். அதன்படி 1878-ல் இங்கிலாந்துக்குக் கப்பலேறினர். அங்கே ஒரு ஆங்கில பாடசாலையில் சேர்ந்து, பிறகு லண்டன் யூனிவர்ஸிடியில் சேர்ந்து ஆங்கில இலக்கியங்களைக் கற்று வந்தார். இங்கிலாந்தில் அவர் தங்கியதெல்லாம் ஒன்றரை வருஷ காலம்தான். அவர் வாசித்து வந்த படிப்பைக் கூட முடிக்காமலேயே தாய் நாட்டிற்குத் திரும்பிவிட்டார். வந்ததும் சிறு கதைகளும், நாடகங்களும் தீவிரமாக எழுத ஆரம்பித்தார். அவைகளெல்லாம் தன் தாய் நாடான வங்கத்து வாழ்க்கையை பிரதிபலித்துக் காட்டும் சித்திரங்களாகத் திகழ்ந்தன. நாடகங்களில் தாமும் ஒரு நடிகராகச் சேர்ந்து திறமையாக நடித்தும் காட்டினர். அவரது கதைகளில் கிராமத்தில் வாழும் எளிய மக்களைப் பற்றியும், ஏழை குமஸ்தாக்களைப் பற்றியும், அவர்களின் சுக துக்கங்களைப் பற்றியும்தான் நன்கு விவரிக்கப்பட்டிருந்தன.

## இல்லற வாழ்க்கை

கவிஞர் தாகூருக்குத் திருமணம் நடந்தபோது வயது இருபத்து மூன்று. 1883-ம் வருஷக் கடைசியில் மிருணாளினி தேவி என்ற அம்மையாரை விவாகம் செய்து கொண்டார். இவ்வம்மையார் தமது கணவனது கருத்தறிந்து நடந்து வந்த ஓர் உத்தமப் பெண்மணியாவர். இதன் பின் கவிஞரது வாழ்க்கை, நிரம்பிய வாழ்க்கையாக ஆயிற்று.

அரசியலில் ஈடுபட்ட தாகூர் தமது தாய் மொழியான வங்காளியிலேயே பேசி தமது நோக்கத்தைப் பிறருக்கு உணர்த்தி வந்தார். பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் வங்க மொழியே போதனைக் கல்வியாக அமைய வேண்டுமென்ற அவாவை வெளியிட்டவரும் அவரே.

விவசாயிகளையும், ஏழைக் கிராமவாசிகளையும் நேரில் அறிந்து, அவரது வாழ்க்கை நிலைகளை நன்கு உணர்ந்தார். அறியாமை இருளிலும், ஏழ்மையிலும் மூழ்கியிருந்த கிராம மக்களுக்கு நன்மை தரும் காரியங்களைச் செய்வதில் தமது சக்தியைச்செலவழித்தார் கவிஞர்.

பதினெட்டு ஆண்டு காலமே கணவரோடு வாழ்ந்த மிருணாளினி அம்மையார் 1902-ம் ஆண்டு நவம்பர் மாதம் 23-ந் தேதி நோய்வாய்ப்பட்டு உயிர் நீக்க நேர்ந்தது.

மனைவியின் முடிவோடு அவரது குடும்பவாழ்வும் முடிவுற்றது என்றாலும், அவரது வாழ்வு பல்வேறு கலாநிலையங்களாகப் பரிணமித்தது.

சாந்தி நிகேதனம் என்ற ஓர் பாடசாலையை ஏற்படுத்தி, அதில் மாணவர்களைச் சேர்த்து இலக்கியத் துறைப் படிப்பை பாடபவனம், சிக்ஷாபவனம், வித்தியா பவனம் என மூன்று வகையாகப் பிரித்து மாணவர்களின் வயதிற்கேற்பப் பாடம் போதித்து வந்தார்.

அப்பாடசாலையின் முன்னேற்றத்திற்கு ஆங்கிலப் பெரியார்களாகிய தீனபந்து ஸி. எப். ஆண்ட்ரூ, டபிள்யூ. டபுள்யூ பியர்ஸ் போன்றவர்கள் பெரிதும் ஒத்துழைத்து வந்தார்கள்.

மேலும், கிராமக் கைத்தொழில், விவசாயம், பள்ளி ஆசிரியர் பயிற்சி, பெண்கள் கல்வி போன்ற வித்தியாலயங்களை ஆங்காங்கு நிறுவினார்.

கவியரசர் தமது ஐம்பதாவது வயதிலெல்லாம் சிறந்த பெரும் கவிஞராகப் புகழ் பெற்றார். அவரது "கீதாஞ்சலி" என்னும் உலகப் புகழ் பெற்ற கவிதை அப்பொழுதுதான் தோன்றியது. ஆகவே கவிஞரின் ஐம்பதாவது பிறந்தநாள் எங்கும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

1921-ல் அவர் சீமைக்குச் சென்றபொழுது அவரது கீதாஞ்சலியின் ஆங்கில மொழி

பெயர்ப்பைக் கண்ட ராதன்ஸ் ஸ்டீமன், ஈட்ஸ் போன்ற சிறந்த கலைஞர்கள் பெரிதும் பாராட்டிப் புகழ்ந்தார்கள்.

1913-ல் இலக்கியத் துறைக்காகக் கொடுக்கப்படவிருந்த நோபல் பரிசு கவியரசருக்கே கிடைத்தது. இதன் மதிப்பு 8000 பவுனாகும்.

இப்பரிசு, இலக்கியம் பௌதீக சாஸ்திரம், இரசாயனம், வைத்தியம், உலக சாமாதானம் ஆகியவற்றிற்காக உலகில் உழைத்துச் சிறந்த பெருமை பெற்றவர்களுக்குக் கொடுக்கப்படுவதாகும்; சாதி மத, நிற, தேச வேற்றுமைகளைப் பாராட்டாது அளிக்கப்படுவதாகும் இப்பரிசு.

ஆசியாவில் முதல் முதலாக இப்பரிசைப் பெற்றவர் கவியரசரே. அதனால் இவர் புகழ் மேலும் உலகில் அதிகமாகப் பரவிற்று.

இப்பரிசின் பெருந்தொகையைத் தாம் நிறுவிய சாந்தி நிகேதனத்திற்கே உரிமையாக்கி விட்டார் கவிஞர்.

இவரது இலக்கிய முயற்சிகளைக் கௌரவித்து அரசாங்கம் 1915-ல் "நைட்" என்ற கௌரவப் பட்டமும் அளித்தது. ஆனால் 1919-ல் நடந்த ஜாலியன் வாலாபாக் கொலை நிகழ்ச்சியைக் கண்டு தமது பட்டத்தை வேண்டாமென்று துறந்துவிட்டார்.

1920-ம் வருஷத்திற்குப் பின் கவிஞர் வெகுவாய் உலகெங்கும் பிரயாணம் செய்தார். அவருக்கு எங்கும் வரவேற்பு அமோகமாக இருந்தது.

பீக்கிங்கில் சைனாச் சக்ரவர்த்தியால் வரவேற்கப் பெற்றார். இத்தாலியில் அரசாங்கவிருந்தாளியாகத் தங்கியிருந்தார். ருஷ்யாவில் ராஜ மரியாதையுடன் வரவேற்கப்பட்டார். இன்னும் கனடா, ஜப்பான் முதலிய தேசங்களுக்கும் சென்றார். அமெரிக்காவில் பல சர்வ கலாசாலைகளும் அவருக்கு அழைப்பு விடுத்திருந்தன.

தமது வாழ்க்கை நோக்கத்தையும், தாம்கொண்டுள்ள இலட்சியங்களையும், இந்தியாவின் பெருமையையும் எடுத்துரைத்து உலகு முழுதும் பாரத நாட்டின் புகழைப் பரப்பினார் கவியரசர். 1939-ல் ஆக்ஸ்போர்டு சர்வ கலாசாலை தாகூருக்கு இலக்கியப் பேராசிரியர் என்னும் பட்டத்தை வழங்கியது. அதனால் தாகூர் அவர்கள் உலகம் போற்றும் உத்தமக் கவிஞராக விளங்கினார்.

தமது வாழ்நாளின் கடைசி முடிவு வரையிலும் அவரது பேனா எழுதிக் கொண்டே யிருந்தது. அவர் எழுதிய பாடல்களின் தொகை மட்டும் இரண்டாயிரத்திற்கு மேலுள்ளனவாம்.

கவிஞர் தமது எண்பதாவது வயதில் நோய்வாய்ப் பட்டார். 1941-ம் ஆண்டு ஜூலை மாதம் கல்கத்தாவிலே சிகிச்சை பெற்று வந்தார். திறமை வாய்ந்த மருத்துவ வல்லுனர்கள் அல்லும்

பகலும் அயராது கவனித்து வந்தார்கள். என்றாலும் பயனில்லை. அவருடைய நோய் நாளுக்கு நாள் வலுத்து வந்தது. டாக்டர்களின் முயற்சிகளெல்லாம் வீணாயின. ஆம். அதே ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8-ந் தேதி தாம் பிறந்து வளர்ந்த குடும்பத்தில் முதல் முதல் கவிதை பாடிய அதே சொந்த வீட்டில் ஆவி பிரிந்தார். கவியரசர் மறைந்த செய்தி ரேடியோ மூலம் உலகு முழுதும் தெரிவிக்கப்பட்டது. இத்துயரச் செய்தி கேட்டு உலக மக்கள் மனம் மிக வருந்தினர்.

காலம் கவிஞரைக் கொன்றுவிட்டது. ஆனால் அவர் கவிதை காலத்தை வென்றுவிட்டது. இவர் எண்ணத்திலிருந்து வெளிவந்த கவிதைகள், கட்டுரைகள், கதைகள் போன்ற இலக்கியச் செல்வங்கள் எப்பொழுதும்மனித சமுதாயத்திற்கு நிரந்தரமான பயனை அளித்துக் கொண்டிருப்பதாகும்; அவர் காட்டிய இலட்சியப் பாதை யாரும் செல்லத் தக்கவை. அவ்வழிகளிலே நாமும் சென்று பயன்பெற கவிஞரின் இந் நூற்றாண்டு விழாவிலே சபதம் ஏற்போம்.

—"ஜனசக்தி"


" ஆரம்பக்கல்வி "
ஆபீஸ்.

**94-95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை-1.**

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 3-50

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1-25

வருடாந்திர பிராவிடண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

Form of Certificate of Income
வருமான நற்சாட்சிப் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

தபால் செலவு பிரத்யேகம்
**முக்கிய அறிவிப்பு**

Book Post-ல் பாரங்களை அனுப்ப தபால் செலவு:

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

## தஞ்சை மாவட்ட
## உதவிபெறும் துவக்கப்பள்ளி
## ஆசிரிய நிருவாகிகள்—நிருவாகிகள்

# மா நா டு.

## திருவாரூர் 22-4-61

## உயர்திரு. சர்தார் A. வேதரத்தினம் M. L. A.

*அவர்கள் நிகழ்த்திய*

# தலைமையுரை.

---

**கல்வித்துறையில் பல்லாண்டுகளாக அருந்தொண்டு புரிந்து வரும் பேரன்பு மிக்க நிருவாகிகளே! உங்களது மாநாட்டுக்குத் தலைமை வகிக்கும் பாக்கியம் எனக்கு அளிக்கப்பட்டமைபற்றி மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். என்னை நீங்கள் கௌரவப் படுத்தியதற்கு எல்லா ஆரம்பப் பாடசாலை நிருவாகிகளுக்கும், சிறப்பாக மாநாட்டு வரவேற்புக்குழுவினருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.**

*இதுபோழ்து உங்களுடைய உள்ளங்களிலே பற்பல இன்னல்கள் தோன்றியிருக்கின்றன என்பது எனக்குத் தெரிகிறது. அவை காரணமாகவே இம் மாநாட்டைக் கூட்டி இருக்கிறீர்கள் என்றும் அறிகிறேன். எனவே உங்களுடைய கஷ்டங்களை ஒழுங்கான முறையில் யாவரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் அரசாங்கத்திற்கும், கல்வி இலாகா அதிகாரிகளுக்கும் விளக்கமாக எடுத்துக்கூறி ஏற்ற பரிகாரம் காண என்னால் முடிந்ததைச் செய்ய ஆர்வம் உள்ளவனாக இருக்கிறேன் என்பதை முதலாவதாக உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். சிறு குழந்தைகளுக்குக் கல்விப் பொருளை அள்ளி வழங்கும் சீரிய பணியில் ஈடுபட்டுள்ள உங்களுடைய துயரங்களைப் போக்குவது கல்வி உலகத்தின் துயரங்களையே போக்குவதாகும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து.*

*நமது நாட்டின் எதிர்காலம் பெருமையுடன் இருக்க வேண்டுமானால் இந்நாட்டிலுள்ள அனைவரும் கல்வி அறிவு உள்ளவர்களாக இருக்கவேண்டும் என்பது நாம் நன்கு அறிந்ததே. வயது வந்த எல்லோருக்கும் 26—1—50 முதல் வாக்குரிமை அளிக்கப் பட்டபடியால் கட்டாய இலவசக் கல்விக் கொள்கையானது அவசரமும் அவசியமும் ஆகிவிட்டது. நாட்டிலுள்ள எல்லா மக்களுக்கும் அரசியல் அறிவு ஏற்படாத நிலையில் கிடைத்த வாக்குரிமை மட்டும்*

சிறந்த பயனை விளைவிக்காது. நமது மாநிலஅரசாங்கம் 1955-ல் வெளியிட்ட வெள்ளையறிக்கையின்படி இந்த மாநிலத்தின் ஆரம்பக் கல்வியை வளர்ப்பதில் உள்ளாட்சி மன்றங்களும், தனியார் துறையினரும் முக்கியமான அளவு பணியாற்றியுள்ளனர் என்று தெரிவித்திருக்கின்றது. ஆகவே இம் மாநிலத்தில் ஆரம்பக்கல்வியைப் பரப்புவதில் உதவி பெறும் ஆரம்பப் பள்ளிகளின் பங்கு மிகச் சிறந்த தொன்றாகும்.

நகர சபைகள் முதலிய உள்ளாட்சி மன்றங்கள் நடத்திவருகின்ற பாடசாலைகளில் கல்வியின் தரம், கட்டுப்பாட்டின்நிலை, ஒழுக்கத்தின் சிறப்பு முதலியவற்றை விட, உதவிபெறும் தனியார் பள்ளிகளில் தரப்படுகின்ற கல்வியின் தரம் முதலியன மிக மிக உயர்ந்தனவாய், மிகச் சிறப்பானவையாய் இருக்கின்றன என்பது பொதுமக்களின் கருத்து. இக்கருத்து இயற்கையாகத் தோன்றக்கூடியது; முற்றிலும் நியாயமானது.

இளஞ்சிறார்களுக்குக் கல்வியை அளிக்கும் நீங்கள் அவர்களுடைய எதிர்கால வளர்ச்சிக்கான அடிப்படையை அமைக்கிறீர்கள். இத்தகைய பயன் மிக்க பணியாற்றுகின்ற உங்கட்கு ஈடாகக் கிடைக்கின்ற பலன் குறைவாக இருத்தல்கூடாது. தொடக்கக் கல்வி ஆசிரியர்கள், தொடக்கப்பள்ளி நிருவாகிகள் முதலானோரின் பொருளாதார நிலை பரிதாபகரமாய் இருக்கிறது. இது அமைச்சர்களும், கல்வி இலாகா அதிகாரிகளும், பொதுமக்களும் அறிந்த உண்மையே ஆகும்.

அரசாங்கப் பள்ளிகள், நகராட்சி ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் மூலம் கல்வியைப் பரப்புவதற்கு ஏற்படுகின்ற செலவைவிடத் தனியார் பள்ளிகள் மூலம் கல்வியைப் பரப்புவதற்கு ஏற்படுகின்ற செலவு மிக மிகக் குறைவு என்பது யாவரும் அறிந்தது.

உங்களில் கட்டணம் வாங்கும் பள்ளி நிர்வாகிகளுக்குப் பற்றுக் குறை ஏற்படாமல் அரசாங்கம் பார்த்துக்கொள்ள வேண்டும். அத்தகைய பள்ளிகள் ஆரம்பக் கல்வியின் வளர்ச்சியில் பொறுப்பும் சிறப்பும் மிகுந்த ஒரு பாகத்தை ஏற்றுள்ளன.

சம்பளம் வசூலிக்கப்படாத பாடசாலை நிருவாகிகளுக்கு ஆசிரியர்களின் சம்பளத்தொகையில் பதினைந்து சதவிகிதத்திற்கு ஈடான ஒரு தொகை வரை நிருவாகக் கொடையாகப் பெறும் உரிமை உங்களுக்கு இருக்கிறது என்றும், அதனை மாவட்டக் கல்வி அதிகாரி வழங்கலாம் என்றும், அவ்விகிதத்திற்கு மேல் இருபது சதவிகிதம் வரை கல்வி இயக்குனர் அனுமதிக்கலாம் என்றும் அரசாங்கத்தின் உத்திரவுஇருப்பதாகத் தெரிகிறது. இருந்தும் நடைமுறையில் மிகச்

சிலபள்ளி நிருவாகிகளே இவ்வுயர்ந்தசதவிகிதக்கொடையைப்பெற்றிருக்கிறீர்கள் என்று நான் அறிகிறேன். சென்ற ஆண்டு அரசாங்கத்தார் ஆசிரியர்களுக்குச் சம்பள உயர்வு கொடுத்தனல் கற்பிப்புக் கொடை அதிகமான பிறகும் உங்களில் சிலருக்குச் சென்ற வருடத்தில் கிடைத்த நிருவாகக் கொடையைவிட இவ்வாண்டு குறைந்த நிருவாகக்கொடை கிடைத்திருப்பதாக அறிகிறேன். மற்றும் ஒருவர் நிருவாகக் கொடையாக ரூபாய் 35 கூடப் பெற்றிருப்பதாகத் தெரிகிறது. இத்தகைய நிலை உண்மையிலேயே வருந்தத்தக்கதாகும். உங்களுக்குக்கிரமமாகத் தரப்படவேண்டிய நிருவாகக்கொடை தரப்படவில்லை என்பது வியப்புக்குரியதாகும்.

எந்தெந்த அடிப்படைக் கோட்பாடுகளின்மீது எந்த அளவு நிருவாகக்கொடை வழங்கப்படும் என்பதைத் திட்டவட்டமாக வரையறுத்து விதிகளின் வடிவில் நிர்ணயிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு இல்லாமல் இருப்பதால்தான் இக்குறைபாடு ஏற்பட்டிருப்பதாக நான் எண்ணுகிறேன்.

மக்களின் உள்ளங்களை நன்கறிந்தவரும் கல்வியின் முன்னேற்றத்தில் கருத்துடையவருமான நமது மாநில முதல் அமைச்சர் **கனம் காமராஜர் அவர்களும்,** கல்வித்துறையில் இணையற்ற ஆர்வமும், அக்கறையும் கொண்டுள்ள கல்வி அமைச்சர் **கனம் C. சுப்பிரமணியம் அவர்களும்,** மதிய உணவுத்திட்டம், பள்ளி அபிவிருத்தித் திட்டம் இலவசக்கல்வி அளிக்கும் திட்டம் முதலியவற்றை அமுலுக்குக் கொண்டுவந்துள்ள, அகில இந்தியாவிலும் நம் மாநிலக் கல்வியைப் பிரசித்திபெறச் செய்த கல்வி இயக்குனர் **பத்மஸ்ரீ நெ. து. சுந்திரவடிவேலு அவர்களும்** அடிப்படைக் கல்வியின் அபிவிருத்தியில் மிகுந்த ஆர்வமும் பற்றுதலும் கொண்டிருப்பது நாம் யாவரும் செய்த பெரும் பேறாகும். இத்தகைய மாண்புமிக்க மந்திரிகளும் கல்வி இலாகா அதிகாரிகளும் கல்விக்காகப் புரியும் ஒப்பற்ற தொண்டு அவர்களுடைய தியாகத்தையும், சேவையையும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

**அன்புள்ள நிருவாகிகளே! ஆசிரிய நிருவாகிகளே!!**

உங்களுடைய கோரிக்கைகள் நியாயமானவையாகவும், ஒப்புக் கொள்ளக்கூடியனவாகவும் இருக்கின்றன. அக்கோரிக்கைகள் நிறைவேற நீங்கள் ஒற்றுமையாக இருந்து உங்களுக்கு இன்னல்தரும் பிரச்னைகளை கனம் அமைச்சர்களுக்கும், கல்வி இலாகா அதிகாரிகளுக்கும் சங்க வாயிலாகத் தெளிவாகத் தெரிவிக்க முன்வந்ததைப் பாராட்டுகிறேன். உங்கள் குறைபாடு கவனிக்கப்படும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

அரசியலாரும், நிருவாகிகளும் ஒத்துழைத்தால்தான் கல்வியின் தரம் முன்னேற்றம் அடையும், நாடும் முன்னேற்றம் அடையும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் தகுந்தவற்றை வேண்டிய அளவு செய்து கல்வி முன்னேறச்செய்ய ஆவன செய்வார்கள் என்று உங்களுக்கு உறுதி கூறுகிறேன். சம்பளக் கமிஷன் சிபார்சுகள் அனைத்தையும் ஏற்றுக்கொண்ட நமது மாநில சர்க்கார் ஆசிரியர்களின் பொருளாதார நிலையை சாத்தியமான அளவு உயர்த்தியுள்ளார்கள். அஃதேபோன்று நிருவாகிகளுடைய நியாயமான குறைகளைத் தகுந்த முறையில் நமது சர்க்கார் தவறாது கவனிப்பார்கள் என்று உங்களுக்கு எடுத்துக்கூற விரும்புகிறேன். இன்று நம்மிடையே விஜயம் செய்துள்ள **திரு. C. முத்தையாப் பிள்ளை** M. L. A. அவர்களும் தென்னிந்திய ஆசிரியர் சங்கத் தலைவரும், ஆசிரியர்களின் பிரதிநிதியாக மேல்மன்றத்தில் அங்கத்தினராக விளங்கும் **திரு. G. கிருஷ்ணமூர்த்தி** அவர்களும் உங்கள்பால் அன்பும் அனுதாபமும் கொண்டவர்கள். அவர்களும் தங்களால் இயன்ற உதவிகளை உங்களுக்குச் செய்ய முன்வருவார்கள் என்ற முழு நம்பிக்கையை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

1961-ம் வருட ஜனக் கணிதப்படி நமது நாட்டில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் விகிதம் 23.7 எனத் தெரிகிறது. எனவே நாட்டில் நான்கில் ஒரு பாகத்தினர்கூட எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக இல்லை. எனப் புலனுகின்றது. மூன்றாவது திட்டத்தில் 6 வயது முதல் 11 வயது வரையுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் கட்டாயக் கல்வி அளிக்கப்பட வேண்டுமாகையால் உங்கள் கடமைகளையும் பொறுப்புக்களையும் உணர்ந்து உண்மையாக உழைப்பீர்கள் என்று நம்புகிறேன்.

நன்றாகச் சிந்தித்து நேர்மையான தீர்மானங்களை நிறைவேற்றி உங்களுடைய நியாயமான குறைகளை அவ்வப்போது சங்க வாயிலாகத் தக்கதைச் செய்ய முன்வாருங்கள். உதவிபெறும் ஆரம்பப் பள்ளிகள் சிறப்பான முறையில் தொடர்ந்து பணியாற்றுவதற்குத் தேவையான எல்லா ஏற்பாடுகளையும் அரசாங்கம் மேற்கொள்ளும் என்பதை எடுத்துக்கூறி, என்னுடையவும் என்னுடைய சகாக்களுடையவும உதவி எப்போதும் உங்களுக்கு உண்டு என்பதை வலியுறுத்தி உங்கள் அனைவருக்கும் என் நன்றியறிதல் உரித்தாகும் என விளம்பி என்னுடைய தலைமையுரையை முடித்துக் கொள்ளுகிறேன்

**வணக்கம்.**

# மாநதியை வழிக்குக் கொண்டு வந்த மாபெரும் கலைஞர்கள்

கல்கத்தா மக்கள் ஒருநாள் காலையில் விழித் தெழுந்தவுடன் கங்கை நதியைக் காணுமல், அது தங்கள் நகரத்துக்கு முப்பது மைலுக்கு அப்பால் ஓடுகின்றது என்று அறிந்தால் எப்படி இருக்கும்? வைகறையில் வைகை ஆற்றுக்குக் குளிக்கச் செல்வோர் வைகையைக் காணுமல் அது வழி விலகி இருபது மைலுக்கு அப்பால் ஓடுகிறது என்று கேள்விப் பட்டால் எப்படி இருக்கும்?

1950-ம் ஆண்டில் அமெரிக்கப் பத்திரிகைகளில் அரசாங்க அறிக்கையை ஆதாரமாகக்கொண்ட அத்தகைய செய்தி ஒன்றை நியூ ஆர்லியன்ஸ் நகரவாசிகள் கண்டார்கள். பதினைந்து ஆண்டுகளுக்குள் மிஸிஸிப்பி நதி தன் போக்கை மாற்றிப் பல மைல்களுக்கு அப்பால் ஓடக் கூடும் என்பதே அச் செய்தி.

அவ்வாறு நேருமாயின் அமெரிக்காவிலுள்ள லூசியாணு மாநிலத்தின் பெரிய துறைமுகப் பட்டினமாகிய நியூ ஆர்லியன்ஸ் உள்நாட்டு நகரம் ஆகலாம். புகழ் பெற்ற அந் நகரம் உப்பு நிறைந்த ஆற்றுக் கழிமுகம் ஆகலாம்; குடி தண்ணீரே அங்கு இல்லாமல் போகலாம்.

ஆறுகளின் போக்கில் சுமார் 450 ஆண்டுக்கு ஒரு தடவை இயற்கை ஒரு மாற்றம் நிகழ்த்தி விடுகிறது. ஆறுகள் கரை புரண்டோடி, புது வழிகள் வகுத்து விடுகின்றன. ஒரு ஆறு மற்ருெரு ஆற்றை விழுங்கி விடுவதுமுண்டு. அத்தகைய ஒன்று நிகழ்ந்து விடுமோ என்று நியூ ஆர்லியன்ஸ் மக்கள் அஞ்சினார்கள்.

## அச்சம் நீங்கியது

இன்று அவர்களது அச்சம் முற்றும் அகன்றுவிட்டது. பத்திரிகைகள் அறிவித்த ஆபத்து இதுவரை நேரவுமில்லை. இனி நேரப் போவதுமில்லை. அதற்குக் காரணம் ஒரு சிறு குழுவினர் செய்து வரும் பணியேயாகும். அமெரிக்க இராணுவத்தைச் சேர்ந்த இஞ்சினியர் குழு ஒன்று அமெரிக்காவின் ஆற்று வழிகளைப் பாதுகாக்கும் அரும்பணியைச் செய்கின்றது.

மிஸிஸிப்பி நதி அமெரிக்காவின் மிகப் பெரிய ஆறு. 450 ஆண்டுக்கு முன் அதன் போக்கு மாறியது. இது, அது மீண்டும் மாறக்கூடிய காலம். அது கடலில் கலக்கும் இடம் ஆயிரம் ஆண்டுகளில் நூறு மைல் விலகியிருக்கிறது.

இந்த ஆற்றுச் சிக்கலைத் தீர்க்க இராணுவ இஞ்சினியர் குழு வழி செய்துள்ளது. கிளின்டன் என்னும் இடத்தில் அக் குழு

மிஸிஸிப்பி நதியின் மாதிரி ஒன்றை அமைத்து வைத்திருக்கிறது. 30 ஆண்டுகளாகச் செயலாற்றி வரும் வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டம் வகுத்துள்ள புதிய முறை இது.

220 ஏக்கர் பரப்பில் மிஸிஸிப்பி நதியின் மாதிரி வடிவம் அமைக்கப் பட்டிருக்கிறது. கற்களையும், கான்கிரீட்டையும், எஃகுத் துண்டுகளையும் கொண்டு அதனை அமைத்திருக்கிறார்கள். அமெரிக்காவில் மூன்றில் ஒரு பகுதியில் பாயும் மிஸிஸிப்பி மாநதியின் சிறிய வடிவம் அது. ஆறு பாயும் இடங்களிலுள்ள மரங்களும், வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள சதுப்பு நிலங்களும் அதில் காட்டப்பட்டு உள்ளன.

## சிற்றுருவம்

மிகவும் நுணுக்கமாகக் கணக்கிட்டு இதை அமைத்திருக்கிறார்கள். பேராறு ஒன்றின் சிற்றுருவமே இது. எனினும் இது, ஒருவகையில் பெரிதாக உள்ள மாதிரி என்றே சொல்லலாம். நியூ ஆர்லியன்ஸுக்கும், மொன்டானோ என்னும் இடத்தில் இருக்கும் பெரிய அருவிக்கும் உள்ள தூரம் 1,700 மைல். அது சுமார் 2 பர்லாங்கில் காட்டப்பட்டிருக்கிறது. பென்ஸில்வேனியா மாநிலத்திலுள்ள பிட்ஸ்பர்க் நகருக்கும் நியூ ஆர்லியன்ஸுக்கும் 919 மைல். மாதிரி வடிவத்தில் ஐந்து நிமிஷத்தில் நடந்து செல்ல முடியும். உபநதியில் கணுக்கால் அளவு தண்ணீர் ஓடுகிறது. மாதிரி மிஸிஸிப்பி நதியில் முழங்கால் அளவு தண்ணீர் ஓடுவதற்கு ஐந்து நிமிஷமானால், அதனை ஒரு நாள் என்று கணக்கு வைக்கவேண்டும்.

குறிப்பிட்ட பொறியியல் சிக்கல்களுக்கு விடையளிப்பதே இந்த மாதிரி வடிவத்தின் பணி. மாதிரி ஆற்றின் பல இடங்களில் தண்ணீர் அளவாகச் செலுத்தப் படுகிறது. வெள்ள நிலை உருவாக்கப்படுகிறது. உண்மையான ஆற்றில் நிகழ்வதெல்லாம் இந்த மாதிரி ஆற்றில் நிகழ்கின்றன. நிகழ்ச்சிகளைப் பதிவு செய்யும் பொறிகள் உள்ளன. பதிவு செய்யப்பெற்ற குறிப்புக்களைக் கொண்டு இஞ்சினியர்கள் வன்மைமிக்க ஆற்றின் செயல்களைக் கட்டுப்படுத்தச் செய்ய வேண்டுவன யாவை என்று காண்கிறார்கள்; மண் அரிப்பு, வண்டல் சேர்ந்து தூர்த்தல் ஆகிய பிரச்னைகளைத் தீர்க்கும் வழிகளையும் கண்டுபிடிக்கிறார்கள்.

இந்த மாதிரி வடிவம் அமைத்ததால், பல நலன்கள் விளைந்துள்ளன. இதனைக் கொண்டு இஞ்சினியர்கள் உண்மை நிலையை அறிந்து முன் அறிவிப்பு விடுக்கிறார்கள். கேடு நேராவண்ணம் ஆவன செய்யும் வாய்ப்பு மக்களுக்கு அளிக்கப்படுகிறது. நெப்ராஸ்காவிலுள்ள ஒமேகா நகரத்தில் உள்ளவர்கள் முன் அறிவிப்பை அறிந்ததும், வேண்டுவன செய்ததால், 6½ கோடி

-டாலர் பெறுமான சொத்துக்கள் அழியாமல் காத்தார்கள். அயோவா மாநிலத்திலுள்ள சியோ நகரத்தில் பல உயிர்கள் காப்பாற்றப்பட்டன. கான்சாஸ் மாநிலத்தில் பல்லாயிரக்கணக் கான கன்று காலிகளுக்குக் கேடு விளையாதவாறு தடுக்க முடிந்தது. மேற்கு ரயில் பாதையில் பல பாலங்கள் காப்பாற்றப்பட்டன.

## சிறப்பைக் காத்தது

நியூ ஆர்லியன்ஸ் நகரம் இந்த மாதிரி வடிவத்தால் பெற்றுள்ள நன்மை என்ன? அதற்குக் கேடு நேராதவாறு காப்பதற்கு மாதிரி வடிவம் என்ன செய்தது?

11-வது நூற்றாண்டில் மிஸிஸிப்பி நதி கரைபுரண்டோடிய போது, இப்பொழுதுள்ள நியூ ஆர்லியன்ஸ் நகருக்குச் சுமார் நூறு மைலுக்கு மேலே, அதனின்று பிரிந்து சென்ற சிற்றாறு "ரெட்ரிவர்" என்னும் ஆற்றோடு சேர்ந்து விட்டது. அந்த ஆறு தன் போக்கில் செல்லாமல், மிஸிஸிப்பி நதியில் வந்து கலந்தது. இடைக்கிடையே "ரெட் ரிவர்" என்னும் ஆறு அச்சாபலாயா நதியோடு கலந்தும் கடலில் விழுந்தது.

எனவே, ஒரு பெரிய H வடிவத்தில் ஆறுகள் ஓடும் நிலைமை பல ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்டு விட்டது. H-இல் வலப்புறத்தி லுள்ளது மிஸிஸிப்பி நதி. "ரெட் ரிவர்" என்னும் ஆறும் அச்சாபலாயா நதியும் இடப்புறத் தில் உள்ளன. இரண்டு கோடு களையும் இணைக்கும் "ஓல்டு ரிவர்" என்னும் ஆறுதான் மிஸிஸிப்பி மேற்கு நோக்கி ரெட் ரிவரோடு கலந்தவழி. அந்த ஆற்றின் வழியே 1942-ல் மிஸி ஸிப்பி நதியின் தண்ணீர் மீண்டும் ஓடலாயிற்று. அப் படியே போய்க்கொண்டிருந்தால் அதுவே மிஸிஸிப்பி நதி ஆகி விடும். நியூ ஆர்லியன்ஸ் நகரத் துக்கும் அதற்கும் தொடர்பு இல்லாமல் போய்விடும்.

இஞ்சினியர்கள் இப் பிரச் னையை ஆராய்ந்து பார்த்தார்கள். அவர்கள் அமைத்த மாதிரி வடி வத்தின் துணையால் அதனைத் தீர்க்க முயன்றார்கள். "ஓல்டு ரிவர்" என்னும் நதி மிஸிஸிப்பி நதியினின்று பிரியும் இடத்தை அடைத்துவிடுவது ஒரு வழி. அப்படிச்செய்தால் அச்சாபலாயா நதியில் கப்பல் போக முடியாது; மிஸிஸிப்பியில் வெள்ளம் மிகுதி யாக இருக்கும்போது, தண்ணீர் போவதற்கு வேறு போக்கு இல்லாமலும் போகும்.

கப்பல் போக்கு வரத்துக்கு வழி விடுவதுதான் சிறந்த முறை யாகக் கருதப்பட்டது. தண்ணீர் அச்சாபலாயாவுக்குப் போய்க் கொண்டிருக்கும். ஆயினும் அது கட்டுப்பாடு செய்யப்பட் டிருக்கும். 1955-ல் இந்த முடிவு செய்யப்பட்டது. தண்ணீரைக் கட்டுப்படுத்தும் கட்டடங்கள் கட்டி முடித்தாயிற்று. நியூ ஆர்லியன்ஸ் மக்களின் அச்சம் தீர்ந்தது. இஞ்சினியர் குழு அமைத்துள்ள மாதிரி வடிவத் தால் விளைந்த பயன் இது.

# சத்திய எழுத்து

மீ. லி. சபரிராஜன்

காந்திஜி பள்ளிக்கூடத்தில் படித்திருக்கிறார். வக்கீல் படிப்பும் படித்தார். ஆனால் புத்தக அறிவைப் பொறுத்தவரை, இந்தக் காலத்துக் கல்லூரி மாணவன் ஒருவன் அவரை மிக்க இலகுவாக வென்றிருக்க முடியும். அவர் படித்த நூல்கள் ஒரு சிலதான். இது சம்பந்தமாக அவர் தமது சுயசரிதையில் எழுதியிருப்பதாவது: "நான் பள்ளியில் படித்தபோது பாடப் புத்தகங்களைத் தவிர, அநேகமாக, வேறு நூல்களைப் படித்ததில்லை என்று கூறலாம். தேசத் தொண்டில் புகுந்த பிறகு, படிப்பதற்கு எனக்கு நேரமே இருப்பதில்லை. ஆகையால், நூல்களைப் படித்த அறிவு எனக்கு உண்டு என்று சொல்லிக் கொள்வதற்கில்லை."

மற்றொருமுறை அவர் 'ஹரிஜனி'ல் இதைப்பற்றி எழுதியுள்ளதாவது: "எங்களில், வெகு குறைவாய்ப் படித்தவன் நான்தான் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்."

இதிலிருந்து காந்தி படித்தது கொஞ்சந்தான் என்பது நன்கு தெரிகிறது. ஆனால் என்ன அதிசயம், அவர் எழுதியது எவ்வளவு! அவை அவர் பெயர் கொண்ட ஓர் இலக்கியமாக வல்லவா இப்போது ஆகிவிட்டன!

இதற்குக் காரணம் என்ன?

காந்தியின் மூலமாய்த்தான் நாம் இதற்கும் விடை தெரிந்து கொள்ள வேண்டும்.

* * *

அஹிம்சா மூர்த்தியான ஏசு பெருமான் அதிகம் படித்தவரல்ல. அப்படியிருந்தும் அவர் அருளிய கிறிஸ்தவ வேதமாகிய பைபிள் ஒரு சிறந்த இலக்கியமாய்க் கருதப்படுகிறது. அறிஞர்கள் அதன் சொல்லழகையும் பொருளழகையும் கண்டு வியக்கிறார்கள். முகம்மது நபியை ஓர் எழுத்தாளரென்று சொல்லமுடியாது. நூல்கள் எழுதிப் புகழ் பெற வேண்டுமென்ற ஆசை அவருக்கு இருந்ததாகவும் கூற இயலாது. ஆனால் அவர் அருளிய திருக்குரான் அராபிய இலக்கியத்தில் தனிச்சிறப்பு வாய்ந்த ஒரு நூலாக மதிக்கப்படுகிறது. இதற்கெல்லாம் காரணம் என்ன?

காந்தி இதற்கு ஓர் அற்புதமான பதில் அளிக்கிறார்: **அவர்கள் இருவரும் முதலில் சத்தியத்தைக் காணப் பாடுபட்டார்கள். அதன் விளைவாக, அவர்களுக்குச் சொல்லாற்றல் உண்டாயிற்று.**"

காந்தியின் எழுத்துச் சிறப்புக்கும் நாம் இதையேதான் மேற்

கோளாக எடுத்துக் காட்ட வேண்டியதாயிருக்கிறது. காந்திஜிக்கு சத்தியத்தின் மீது அளவில்லாக் காதல் இருந்தது. அதைக் காண முயன்றார். அப்போது பல பேருண்மைகள் அவர் உள்ளத்தில் தோன்றின. அவையே எழுத்து வடிவம் பெற்றன.

காந்தி வாழ்ந்த காலம் வேறு. ஏசுபெருமானும் முகம்மது நபியும் வாழ்ந்த காலம் வேறு. ஆகவே, காந்தி ஆன்மீகத் துறையில் மட்டுமல்லாது வாழ்வின் எல்லாத் துறைகளிலும் சத்தியத்தைக் காண முயன்றார். எனவே, அவருடைய எழுத்து பல்வேறு வகைப்பட்டதாயும் விரிந்தும் பரந்தும் இருக்கிறது. அரசியல், சமூகம், பொருளாதாரம், கல்வி முதலியவை பற்றி எழுதியதைப் போலவே, **மருத்துவத்தைப் பற்றிக்கூட அவர் ஒரு நூல் எழுதியிருக்கிறார். அது, அவர் எழுதிய நூல்கள் எல்லாவற்றையும்விட அதிகமாக ஐரோப்பாவில் விற்பனையாகிறதாம்!**

அவருடைய நூல்களைச் சற்றுப் புரட்டிப் பார்த்தால், அதில் ஒரு சிறப்பான அம்சத்தை நாம் காண்கிறோம். முழுத்துண்டு அணிந்த அம்மகானைப் போலவே அவருடைய நடையும் இருக்கிறது. ஆடம்பரச் சொற்களோ, வீண் அடைமொழிகளோ இல்லை. உள்ளத்தில் இருப்பது அப்படியே எழுத்தாக வருகிறது. சொற்செட்டும் அதிகம். நம்முடைய திருக்குறள் அவர் மனத்தைப் பெரிதும் கவர்ந்ததற்கு ஒரு முக்கிய காரணம் அதன் அமைப்பும் சொற்செட்டுமேயாகும். "சின்னஞ்சிறு கவிகளில் எவ்வளவு பொருள் பொதிந்திருக்கிறது?" என்று அதிசயிக்கிறார் அவர். அருடைய எழுத்திலும் இந்தச் சிறப்பை நாம் காண்கிறோம் அல்லவா? எப்படி எழுத வேண்டும் என்பது சம்பந்தமாக அவர் ஒருமுறை கூறியதாவது: **"ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்பினால் சுற்றி வளைத்துக் கொண்டிருக்கக் கூடாது. பூசி மெழுகக் கூடாது. பிறர் உள்ளம் நோகும்படி செய்யவும் கூடாது. மறைக்காமல் உள்ளதை உள்ளபடி கூறவேண்டும்."**

இந்த வழியைக் காந்தி பின்பற்றியதால் அவருடைய எழுத்தில் அதிகத் தெளிவு இருப்பதைக் காண்கிறோம். குழந்தைகளுங்கூடப் புரிந்து கொள்ளத்தக்கவிதமாக அது அமைந்திருக்கிறது. அதே சமயத்தில் பெரியவர்களையும் ஆழ்ந்து சிந்திக்க வைக்கும் பொருட் செறிவு வாய்ந்ததாயிருக்கிறது. மலர் போன்றது. ஆனால் அழுத்தம் மிக்கது.

கவிதையோ காவியமோ அவர் எழுதியதில்லை. ஆனால் வருடைய எழுத்து அவரையும் அறியாமலே சில இடங்களில்

கவிதையாய் உருவெடுக்கிறது: கவி என்றால் யார்? வானிலிருந்து குதித்து வந்தவனல்ல. தன் மனத்திலே தோன்றும் கருத்தையோ உணர்ச்சியையோ கவி உருவத்தில் அழகாய் அமைத்துக் காட்டுபவனே கவிஞன். காந்திக்குப் பிடித்தமானவற்றுள் இராட்டினம், பசு முதலியன முக்கியமானவையாகும். இவற்றைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் அவருக்கு உணர்ச்சிப்பெருக்கு உண்டாகிறது. மனத்தில் பொங்கிய அவ்வுணர்ச்சி எழுத்தில் வசன கவிதையாக இடம்பெறுகிறது. ஓர் உதாரணம்: "இராட்டினம் வேகத்துடன் சுழலும்போது, மற்றவையெல்லாம் பொலிவிழந்து உயிரற்றுக் காட்சியளிக்கின்றன. ஏனெனில், ஒவ்வோர் இழைநூலிலும் என்னுடைய இராமன் திருநடம் புரிவதைக் காண்கிறேன். நாற்பது கோடி மக்களும் சேர்ந்து நூல் நூற்றால் அந்நூலுக்கு எவ்வளவு சக்தி இருக்கும் என்பதை நான் சிந்தையிலெண்ணிப் பார்க்கும்போது என் இதயத்தில் குதூகலம் பொங்கி, நான் பரவசமடைகிறேன்" ("Before charka in full swing, every thing else appears dull and lifeless to me. For I behold my Rama dancing in every thread drawn. When I contemplate the strength of the yarn drawn by forty crores of hands my heart is filled with an ecstasy of joy"—Harijan-22—4—'46.)

பசு அவருடைய கண்ணுக்கு வெறும் விலங்காகக் காணப்படவில்லை. "அது இரக்கமே ஓர் வடிவாக அமைந்த கவிதை!" (It is a poem of pity) என்று இரத்தினச் சுருக்கமாகக் கூறுகிறார்.

யாரும் கவனிப்பாரற்றுக் கிடந்த இந்தியக் குடியானவன், ஒதுக்கப்பட்டு மூலையில் வாழ்ந்த ஹரிஜனங்கள் முதலியோரைப் பற்றி உள்ளமுருகும்படியாக அவர் எழுதியுள்ளார்.

* * *

கல்வி, சமூகம், பொருளாதாரம் முதலிய பல்வேறு விஷயங்களைப் பற்றி எழுதிக் குவித்த காந்தி ஒரு கதையும் எழுதியிருக்கிறார். அது அவருடைய சொந்தக் கதை-சுயசரிதை. என்றும் நிலைத்து நிற்கக்கூடிய சிரஞ்சீவிக் கதை. படிக்கப் படிக்கத் தெவிட்டாத கதை.

சுயசரிதை எழுதும் வழக்கம் பொதுவாக நம்மிடம் கிடையாது. ஆனால் இன்று அது இலக்கியத்தில் ஒரு முக்கிய பகுதியாகிவிட்டது. வாழ்க்கையில் ஒருவன் நல்ல நிலைமைக்கு வந்தால், அவன் எப்படி அந்த நிலைமையை அடைந்தான் என்பதை அறிய மக்கள் ஆவல் கொள்வது இயற்கை. அதிலும், அவன் தானே தன் கையால்

அதை எழுதினால் அதைப் படிக்க வேண்டுமென்ற ஆவல் இன்னும் அதிகமாகவே உண்டாகும். ஆனால் இதில் ஒரு கஷ்டமிருக்கிறது. ஒரு மனிதன் தன்னைப் பற்றித் தானே எழுதுவதற்கும், மற்றொருவன் அவனைப் பற்றி எழுதுவதற்கும் வேற்றுமை உண்டு. தன்னைப் பற்றித் தானே எழுதும்போது தன் குற்றங் குறைகளை உள்ளது உள்ளபடி எழுதவோ நடந்ததை நடந்தபடி எழுதவோ அவனுக்குக் கை வராது. மற்றொருவன் எழுதினால் தொலைவில் நின்று அவனைச் சீர்தூக்கிப் பார்த்து விருப்பு வெறுப்பில்லாமல் எழுத இடம் இருக்கிறது.

இதுவரை பல சுய சரிதைகள் வெளிவந்துள்ளன. மன்னர்கள், எழுத்தாளர்கள், அரசியல்வாதிகள், படைத் தலைவர்கள் முதலியோர் எழுதியுள்ளார்கள். அவை அழகாகவும் சுவையாகவும் திறமையாகவும் எழுதப்பட்டிருக்கின்றன. காலம் என்னும் திரையில், தங்கள் வாழ்க்கை என்னும் ஓவியத்தை, கண் கவரும் வண்ணங்களில் தீட்ட முயன்றிருக்கிறார்கள். ஆனால், காந்தி தம் சுயசரிதையில் என்ன எழுதியிருக்கிறார்?

தம்முடைய குற்றம் குறைகளை வரிசைப்படுத்திக் கொடுத்திருக்கிறார். மற்றவர்கள் வெளியே சொல்ல வெட்கப்படும் விஷயங்களைப் பச்சை பச்சையாக எழுதியிருக்கிறார். “பார்த்துக் கொண்டீர்களா, மக்களிலே கடைப் பட்டவனாகிய நான்தான் காந்தி; என்னைக் காட்டிலும் தீயோன் வேறு யார் இருக்க முடியும்?” என்று சொல்லுவது போலிருக்கிறது. அவரைப் பற்றியும் அவர் ஆற்றியுள்ள அரும் பெருஞ் செயல்களைப் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டுமானால், பிறர் அவரைப் பற்றி எழுதியுள்ள நூல்களைத்தான் நாம் தேட வேண்டியதாயிருக்கிறது. மாபெரும் மகான் தம்மைச் சாதாரண மனிதர்களுள் ஒருவராக நினைத்துப் பேசுகிறார். அப்படியிருந்தும் இது நம் உள்ளத்தை உருக்குகிறது. காரணம் என்ன?

**காந்தி உள்ளதை உள்ளபடி எழுதியிருக்கிறார். ஆகவே அது அழகானதாயிருக்கிறது.**

சத்தியத்துக்கு மேல்பூச்சோ அலங்காரமோ தேவையில்லை.

“அழகே சத்தியம்; சத்தியமே அழகு” என்றான், கீட்ஸ்.

காந்தி சத்தியம் தான் அழகு என்று அழுத்தந் திருத்தமாகக் கூறுகிறார். “அழகே சத்தியம்” என்பதை அவர் ஒப்புக்கொள்ளவில்லை. அவர் மேலும் கூறுவதாவது: “நான் சத்தியத்தில் அழகைக் காண்கிறேன். சத்தியத்தின் மூலமாகவும் அழகைக் காண்கிறேன். மக்கள் சத்தியத்தில் அழகைக் காணத் தொடங்கும் போதெல்லாம் உண்மைக் கலை தோன்றும்.”

காந்தி எழுத்தையே 'தொழிலாய்க் கொண்டவரல்ல. ஓய்வு ஒழிவில்லாத தேசத் தொண்டின்போது, ரயிலிலும் மோட்டாரிலும் அவசர அவசரமாய் ஏதோ எழுதினார்; அவ்வளவுதான். அப்படியிருந்தும், கலையைப் பற்றியும் இலக்கியத்தைப் பற்றியும் அவர் கூறும் கருத்துக்கள் எவ்வளவு புதுமையானவையாயும் அற்புத மானவையாயும் இருக்கின்றன !

இந்த அற்புதமான நூலுக்கு-சுய சரிதைக்கு—அவர் கொடுத்திருக்கும் பெயரைப் பற்றி என்ன சொல்லுவது !— சுய சரிதை என்று கூறவில்லை. "சத்திய சோதனை?" என்கிறார். இதைக் காட்டிலும் பொருத்தமான பெயர் வேறு என்ன இருக்க முடியும் ?

* * *

உண்பதற்கும் இன்பங்களை நுகருவதற்கும் புகழைத் தேடுவதற்கும் நாம் வாழ்கிறோம். ஆனால், காந்தி அவ்விதம் வாழவில்லை. அவருடைய வாழ்க்கை சத்திய சோதனையாகும். சத்தியத்தை வாழ்வு முழுவதும் கடைப்பிடித்து, அதனால் ஏற்பட்ட சோதனைகளைக் கூறுகிறார். எத்தனையோ பல மலைகளுக்குஅப்பாலிருக்கும் ஒரு மாமலையின் மீது வாய்மை என்னும் ஒரு தீபம் எரிகிறது. அதை அடைவதற்காக ஓர் ஆன்மா அரும்பாடு படுகிறது. அப்போது அது பல சோதனைகளுக்குள்ளாகிறது. இதையே நாம் அவருடைய சுய சரிதையில் காண்கிறோம்.

சின்னஞ் சிறுவயதிலேயே இந்தச் சோதனை தொடங்குகிறது. தாம் செய்த ஒரு குற்றத்துக்காக, மன்னிப்பு வேண்டிக் கடிதம் எழுதித் தந்தையிடம் கொடுத்து விட்டு நிற்கிறார். கடிதத்தைப் படித்துக்கொண்டிருக்கும் போதே தந்தையின் கண்களிலிருந்து நீர் வழிக்கிறது. அதைப் பார்த்த சிறுவன் மோகனின் கண்களிலிருந்து நீர் பெருகுகிறது. அது அவனுடைய உள்ளத்திலிருந்த களங்கத்தைப் போக்குகிறது. இதை அவருடைய சுயசரிதையில் நாம் படிக்கும்போது, நம்முடைய விழிகளிலும் நீர் ததும்புகிறது. நம் உள்ளத்திலுள்ள களங்கமும் அகலப் பார்க்கிறது. ஆனால், அந்தோ, அது ஒரே ஒரு நிமிஷந்தான்; மறுபடியும் நாம் பழையவர்களாகவே ஆகிவிடுகிறோம்.

இப்படி ஒரு சம்பவமா, இரண்டு சம்பவங்களா ? எண்ணிலடங்காதவை நிறைந்திருக்கின்றன.

ஒரு கொள்ளைக்காரன் புத்த பகவானுடைய சிலை ஒன்று வைத்திருந்தானாம். ஒரு துறவி அதைப்பார்த்துவிட்டு, "அப்பா, உன் வாழ்க்கைக்குப் பொருந்தாததாக அல்லவா இருக்கிறது இது!" என்று கேட்டாராம். "ஐயனே, உண்மைதான். ஆனால் இதன்மூலம் என்றாவது

ஒரு நாள் நான் நல்லவனாகலாம் அல்லவா?" என்று பதில் அளித்தானாம் கொள்ளைக்காரன். நாம் நல்லவர்களோ, கொள்ளைக்காரர்களோ, அதைப்பற்றி இங்கு ஆராய வேண்டியதில்லை. ஆனால் அன்றாட வாழ்வில் வாய்மையை மறந்து, தீவினைகளைச் செய்கிறோம் என்பது மறுக்க முடியாத உண்மை. நேரம் கிடைக்கும்போதெல்லாம் காந்தியின் சுயசரிதையைப் படிப்பதன் மூலம், நம் அகத்திலுள்ள களங்கத்தை, அடியோடு ஒழிக்க முடியாவிட்டாலும், ஓரளவாவது ஒழிக்க முடியும் அல்லவா?

நம் ஜனாதிபதி இராஜேந்திரப் பிரசாத் அவர்கள் நாள் தோறும் காலையில் பகவத் கீதையுடன் பாராயணம் செய்வதாக சமீபத்தில் ஒரு செய்தி வெளிவந்திருக்கிறது. இது முற்றிலும் பொருத்தமானதாகும். கீதை ஓர் அற நூல். சத்திய சோதனை, அதை வாழ்க்கையில் பக்தியுடன் கடைப் பிடித்து ஒழுகிய ஒரு மகானுடைய கதை.

ஏசுநாதர் தம் வாழ்க்கையை எழுதவில்லை. கௌதம புத்தர் தம் சொந்தக் கதையைத் தாமே எழுதவில்லை. முகம்மது நபியும் அப்படியே. ஆனால் காந்தி எழுதி வைத்துவிட்டுப் போயிருக்கிறார். இது நமக்குக் கிடைத்துள்ள தனிப் பெரும் பேறாகும்.

—'கிராம ராஜ்யம்'

---

## சிந்தனைக்கு விருந்து

யானையைப் பிடிப்பதற்காகத் தோண்டிய குழிகளைச் செடி கொடி தழைகளால் மறைத்துவைப்பது வழக்கம். அதுபோலத்தான் மனித சமுதாயமும் வாழ்க்கைப் பாதையில் உள்ள மேடு பள்ளங்களை மயக்க மூட்டும் தத்துவ ஞானங்களால் மறைக்கப் பார்க்கிறது.

—காண்டேகர்

நியாயம் நம் பக்கம் இருக்கவேண்டும் என்ற ஆசை எல்லார்க்கும் இருக்கும். ஆனால் நியாயத்தின் பக்கம் நாம் இருக்கவேண்டும் என்ற ஆசை எல்லாருக்கும் இருப்பதில்லை. ஆனால் இருக்கவேண்டும்.

—ரிச்சர்ட் வேட்லி

இப்போதே விழித்திடு! எழுந்திரு! இன்றேல் என்றென்றும் விழுந்துகிட.

—மில்டன்

# நாட்டுக்கு நலன் விளைக்கும் கூட்டுறவு இயக்கம்

நாட்டுக்கு நல்லதெனக் கருதப்படும் கூட்டுறவு நமது நித்திய வாழ்க்கை நடவடிக்கைகளின் ஓர் அம்சமாக அமைந்துவிட்டது; இது சமுதாயத்தின் எல்லாப் பிரிவுகளிலும், நாடு முழுவதுமே பரவியிருக்கிறது.

சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் தோன்றிய இவ்வியக்கம் நாடு சுதந்திரமடைந்ததற்குப் பிறகு தீவிரமாக முன்னேறி வருகிறது. 1951 ஏப்ரல் மாதம் முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கப்பட்டபோது கூட்டுறவு இயக்கத்தை வளர்ப்பதற்காக விசேஷ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன; இவை இரண்டாவது திட்ட காலத்தில் தீவிரமாக்கப்பட்டதால் முதல் 10 ஆண்டுகளில் கணிசமாக முன்னேறியிருக்கிறது.

1960 ஜூன் மாதத்தில் சுமார் 2 கோடி 50 லட்சம் அங்கத்தினர்கள் கொண்ட 2.84 லட்சம் கூட்டுறவு சங்கங்களிலிருந்தன; அவற்றின் நடப்பு மூலதனம் 880 கோடி ரூபாயாகும். இவை இந்திய மக்களில் மூன்றிலொருபகுதியினருக்குச் சேவை செய்துவருகின்றன.

மூன்றாவது திட்டத்தில் மக்களின் சிறந்ததொரு இயக்கம் என்னும் ரீதியில் கூட்டுறவு இயக்கத்துக்குச் சிறப்பிடமளிக்கப்பட்டிருக்கிறது. ஐந்தரை லட்சம் கிராமங்களையும் இந்த இயக்கத்தில் சேர்க்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகளில் நான்கில் மூன்று பகுதியினர், சேவை கூட்டுறவுச்சங்கங்களில் அங்கத்தினராகச் சேரவேண்டுமென்பது மூன்றாவது திட்ட லட்சியங்களில் ஒன்றாகும்.

கூட்டுறவு இயக்கம் தொடங்கப்பட்டது முதலே விவசாயிகளுக்குக் கடன் வழங்கும் சங்கங்களின் எண்ணிக்கை முக்கியமானதாகக் கருதப்பட்டு வந்தது. சுமார் 1 கோடி 20 லட்சம் விவசாயிகளை அங்கத்தினர்களாகக் கொண்ட 1 லட்சத்து 83 ஆயிரம் கடன் வழங்கும் சங்கங்களிருக்கின்றன. அதற்கு அடுத்தபடியாக நெசவாளர் சங்கங்களும், பிற தொழில் கூட்டுறவு சங்கங்களுமாக சுமார் 25 ஆயிரம் சங்கங்களிருக்கின்றன. இவைகளுக்கு அடுத்தபடியாக கரும்பு சப்ளை சங்கங்கள், உபயோகிப்போர் சங்கங்கள், விற்பனை ஏற்பாட்டுச் சங்கங்கள், ஜாகை வசதி சங்கங்கள் ஆகியவை இருக்கின்றன.

சுமார் 60 சதவிகிதக் கிராமங்களில் 20 சதவிகிதம் கிராமங்களிலே பரவியிருக்கும் விவசாயக் கூட்டுறவு சங்கங்கள் 402 மத்திய

கூட்டுறவு பாங்குகளின் கீழ் இயங்குகின்றன; இவை ராஜ்ய மட்டத்தில் உச்சஸ்தான கூட்டுறவு சங்கங்களுடன் இணைக்கப் பட்டிருக்கின்றன. நில அடமான பாங்குகள், உணவுத்தானிய பாங்குகள், நகரக் கூட்டுறவு பாங்குகள் போன்ற முக்கியமான ஸ்தாபனங்களும் இயங்கிவருகின்றன.

விவசாயிகளுக்குக் கடன் வழங்கும் ஏற்பாடு சென்ற பத்து வருடங்களாகக் கணிசமாக வளர்ந்து வந்திருக்கின்றது.

குறைந்தகால, நடுத்தரக்கடன்கள் ஏராளமாக வழங்கப்பட்டிருக்கின்றன. 1950-51-ல் 23 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. 1960-61-ல் 190 கோடி ரூபாய் கடனுகை வழங்கப்பட்டிருக்கிறது. அதாவது, பத்து ஆண்டு காலத்தில் இது எட்டுமடங்கு அதிகரித்திருக்கிறது. நில அடமான பாங்குகள் வழங்கும் கடன் 1951-52ல் 4 கோடி ரூபாயாக இருந்து 1959-ல் 22 கோடியாக அதிகரித்திருக்கிறது.

கூட்டுறவு இயக்கம் புதுத் துறைகளில் முன்னேறி வருகிறது. சேவைக் கூட்டுறவு சங்கங்கள் கிராமப் பொருளாதார அமைப்பில் முக்கிய பங்கு வகித்துக்கொண்டு, விதை, ரசாயன உரம், இரும்பு, உருக்கு, சிமிட்டி, மண்ணெண்ணெய், சர்க்கரை போன்ற சாமான்களை விநியோகிப்பதோடு, கடன் வழங்கியும் வருகின்றன. இவை நவீன முறை விவசாயத்துக்கு வேண்டிய யந்திரங்களையும், பயிற்சிபெற்ற சிப்பந்திகளையும் தந்து உதவுகின்றன. ஜில்லா, ராஜ்ய தேசிய மட்டங்களிலும் இவை படிப்படியாக இணைக்கப்பட்டு வருகின்றன.

விவசாயத்தை வர்த்தக ரீதியில் சிறந்த முறையில் அமைக்கவேண்டுமென்பது நெடு நாட்களாக உணரப்பட்டிருக்கிறது. துண்டு நிலங்களும் கட்டுபடியாகாத நிலங்களும் நிறைந்த இந்தியாவின்பிரச்னைகளைக் கூட்டுறவு விவசாயம் தீர்த்துவைக்கும். நிலங்கள் ஒன்று சேர்க்கப்பட்டு கூட்டாக சாகுபடி செய்து நிர்வகிக்கப்படுகிற 1800 கூட்டுறவு சங்கங்கள் இந்தியாவில் இருக்கின்றன. இவை லாபகரமாக முன்னேறி வருகின்றன.

கூட்டுறவு விவசாயத் திட்டத்தை மூன்றாவது திட்டகாலத்தில் விஸ்தரிப்பதற்கு வேண்டிய விரிவான திட்டமொன்று தயாரிக்கப்படுகிறது. இந்த இயக்கம் தானாகவே தோன்றிப் பரவக் கூடியதாகும்; இதற்காக 2,200 முன்னோட்டக் கூட்டுறவு திட்டங்கள் ஏற்படுத்தப்படும். கூட்டுறவு விவசாயத்தை மேற்கொள்வதில் எவ்வித நிர்ப்பந்தமும் இருக்காது என்பது வலியுறுத்தப்படுகிறது. கூட்டுறவு இயக்கத்தின் இதர துறைகளும் இம்மாதிரி விஸ்தரிக்கப்படும்.

விவசாயிகளின் தனி நபர் வருமானம் பெருக உற்பத்தி பெருகினால் மட்டும் போதாது. நல்ல மக

சூலால் கிடைக்கும் பலனை இடைத்தரகர்கள் கொண்டு செல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இதற்காகத்தான் கூட்டுறவு ஏற்பாடும் பக்குவ நடவடிக்கைகளும் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. இரண்டாவது திட்ட காலத்தில் புதிதாக 1900 விற்பனை ஏற்பாட்டுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தவிர, ராஜ்யங்களில் இவையெல்லாம் சேர்ந்து விற்பனை ஏற்பாட்டுத் தலைமைச் சங்கங்களையும் அமைத்துள்ளன.

விளைபொருள்களைக் கூட்டுறவு முறையில் பக்குவப்படுத்துவதில் கரும்பு, பஞ்சு ஆகியவை விஷயத்தில் நல்ல முன்னேற்றம் ஏறபட்டிருக்கிறது. லைசென்சு வழங்கப்பட்டுள்ள 52 கூட்டுறவு சங்கங்களில் பாதி சங்கங்கள் 1961 மார்ச் மாதத்தில் உற்பத்தி தொடங்கிவிட்டன. இந்தியாவில் கணிசமான அளவு சர்க்கரை கூட்டுறவுத் துறையிலே கிடைக்கிறது.

பல்வேறு தொழில்களிலும் கூட்டுறவு இயக்கம் வளர்ந்து தற்போது 25 ஆயிரம் தொழில் துறைக் கூட்டுறவு சங்கங்களிருக்கின்றன. இவற்றில் கைத்தறித் தொழில் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை கணிசமாக இருக்கின்றது. இவற்றின் உச்சஸ்தான சங்கங்கள் நூல் விநியோகிப்பது முதல் துணி விற்பனை வரையில் எல்லா ஏற்பாடுகளையும் கவனித்து வருகின்றன. கூட்டுறவு நூற்பு ஆலைகள் அங்கத்தினருக்கு வேண்டிய நூலை சப்ளை செய்கின்றன.

வீடு கட்டித்தருதல், புத்தகங்களை அச்சிட்டு வெளியிடுவது, பால்பண்ணை, மீன்பண்ணை, வாகனப் போக்குவரத்து, காண்டிராக்ட் வேலை ஆகியவற்றுக்காகவும் கூட்டுறவு சங்கங்கள் இருக்கின்றன. 1959-ல் இவை 20 ஆயிரம் இருந்தன. அவற்றில் 4700 வீடு கட்டித்தரும் சங்கங்களும், 7 ஆயிரம் விற்பனை சங்கங்களும் 1000 காண்டிராக்ட் சங்கங்களும் ஆகும்.

கிராம சமுதாயங்களையும் நகர சமுதாயங்களையும் முன்னேற்றுவதற்காக உத்தேசிக்கப்பட்டிருக்கும் திட்டங்களின்படி பல்வேறு வகையான கூட்டுறவு சங்கங்கள் மேலும் தோன்றும் என்பதாக எதிர்பார்க்கப்படுகிறது.

---

## சிந்தனைக்கு விருந்து

**ஒருவரிடம் மட்டும் கட்டுப்பட்டுக்கிடக்கும் அன்பைப் பின்னர் இருவரிடத்தும் பின்னர் சில உயிர்களிடத்தும் முடிவில் எல்லா உயிர்களிடத்தும் பரப்பும் தன்மை உடையது இல்லறம்.**

**—திரு. வி. க.**

# ★ புத்தகப் பூங்கா ★

## திருக்குறள் நூற்பா [குட்டிக் குறள்]

[ஆசிரியர்: திரு சுகவனம் சிவப்பிரகாசனார். கிடைக்குமிடம்: பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-1. விலை ரூ. 1-13.]

திருக்குறள், தமிழகம் பெற்றுள்ள பெறற்கரிய செல்வம்; அள்ள அள்ளக் குறையாத அறிவுக் கருவூலம்; உலகெலாம் புகழும் சிந்தனைச் சுரங்கம். எந் நாட்டாரும் எச் சமயத்தாரும் எம் மொழியாரும் எவ்வினத்தாரும், "இந்நூல் நன்னூல்; காலத்தை வென்ற பொன்னூல்" என்று ஏற்றிப் போற்றி மகிழும் பெற்றிமை படைத்த பெருநூல். அந்த ஒப்பற்ற இலக்கியத்தின் இணையற்ற சிறப்பை அனைவருக்கும் உணர்த்தும் முறையில் பல்வேறு அறிஞர் பெருமக்களால் பலதிற நூல்கள் இயற்றப்பட்டுள்ளன. அத்தகைய நூல்களில் தலைசிறந்த ஒன்று இத் "திருக்குறள் நூற்பா"

திருக்குறட் பாடல் ஒவ்வொன்றும் இரண்டே வரிகளில் அமைந்துள்ளது அல்லவா? அந்த இரண்டு வரிப் பாடலையும் இந் நூலாசிரியர் ஒரே வரியில் குறுக்கி அமைத்துள்ளார். சொற் சுருக்கத்துக்குத் தலைசிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்வது திருக்குறட் பாடல் ஒவ்வொன்றும். அந்தச் சுருங்கிய பாடலுக்கும் ஒரு சுருக்கப் பாடல் இயற்றுவதென்றால் அது தனிப்பெரும் திறமையே அன்றோ? அந்தத் திறமை இந் நூல் முழுவதும் தன் நலம் காட்டி நம்மை மகிழ்விக்கிறது.

"குழலினிது யாழினிது என்ப தம்மக்கள் மழலைச் சொற் கேளாதவர்" என்றார் வள்ளுவப் பெருந்தகையார். அதனைக் "குழலும் யாழும் மழலை முன் குழைவ" என்று சுருக்கிவிட்டார் இந் நூலாசிரியர். வள்ளுவரின் ஏழு சீர் இந் நூலாசிரியரிடம் நான்கே சீராகச் சுருங்கியபோதிலும் மூலப் பாடலில் உள்ள அதே அழகு, அதே இனிமை, அதே தெளிவு, அதே சிறப்பு இங்கும் விளங்குகின்றன அல்லவா? இது போலவே, "எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும், கண்ணென்ப வாழும் உயிர்க்கு" என்னும் குறட்பா, இக் "குட்டிக் குறள்" நூலில் "எண்எழுத்து உயிருக்கு இருவிழி என்ப" என்று சுருங்கியுள்ளது. கடுகு சிறுத்தாலும் காரம் சிறுக்கவில்லை அல்லவா?

இந் நூலாசிரியராகிய சுகவனம் சிவப்பிரகாசனார் இந்த அழகிய நூலை யாத்து அளித்ததன் வாயிலாக அருந்தமிழ் மொழிக்கு ஆற்றியுள்ள தொண்டு, எழிலும் ஏற்றமும் மிகுந்ததாகும். தமிழார்வம் படைத்த அனைவர் கைகளிலும் தவழ வேண்டிய சிறப்புடைய நூல் இது.

# எமது புதிய வெளியீடுகள்

(புதிய பாட திட்டப்படி)

ஆரும் வகுப்புக் குரியவை :

## 1. திரு. வி. க. செந்தமிழ்ச் செல்வம்

தொகுப்பாசிரியர் : த. சே. உமாபதி, M. A., L. T. (Dip. in Geog)
கெஜட் பக்கம் 25  தேதி 10-5-'61 :  விலை ரூ. 1-25

## 2. புதுமுறை சங்கக் கணிதம்

ஆசிரியர் : A. C. பாலசுந்தரம், B. A., L. T.
கெஜட் பக்கம் 28  தேதி 10-5-'61 :  விலை ரூ. 1-50

## 3. சமூக நூல்

ஆசிரியர் : துரை பழனிவேலு, B. A., L. T.
கெஜட் பக்கம் 14  தேதி 10-5-'61 :  விலை ரூ. 1-75

## 4. பொது விஞ்ஞானம்

ஆசிரியர் : K. லக்ஷ்மி நாராயணசாமி, B. A., L. T.
கெஜட் பக்கம் 30  தேதி 10-5-'61 :  விலை ரூ. 1-50

## 5. அறிவுச்சுடர்

ஆசிரியர் : த. சே. உமாபதி, M. A., L. T. (Dip. in Geog)
கெஜட் பக்கம் 10  தேதி 10-5-'61 :  விலை ரூ. 0-62

## 6. Mother India Supplementary Reader

(English Non-detailed)
By Mrs. Lucy Arulraj.
கெஜட் பக்கம் 13  தேதி 10-5-'61 :  விலை ரூ. 0-50

பத்தாம் வகுப்புக்குரியவை :

## 1. பொது விஞ்ஞானம்

ஆசிரியர் : K. லக்ஷ்மி நாராயணசாமி, B. A., L. T.
கெஜட் பக்கம் 35  தேதி 10-5-'61 :  விலை ரூ. 2-50

## 2. இலக்கணம்-கட்டுரை-மொழிப் பயிற்சி

ஆசிரியர் : புலவர் சொ. முருகேசனார்
கெஜட் பக்கம் 31  தேதி 10-5-'61 :  விலை ரூ. 1-50

## அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்

('ஆரம்பக்கல்வி' ஆபீஸ்)

**94-95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை—1.**

தபால் பெட்டி எண் 1818.  டெலிபோன் எண் 55844.

உயர்தர ஆரம்பப் பள்ளிகளுக்கு...

## வீரபாண்டியன் தமிழ் வாசகம்

ஆசிரியர்: வித்துவான் வை. சுப்பிரமணியம்

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| ஏழாம் வகுப்பு | 0 14 0 | 2 | 13-5-'59 |

*இந்தப் புத்தகம் மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் தபால் செலவு உள்பட 50 ந. பை. M. O. அனுப்பவும்.*

## சமூக நூல்

ஆசிரியர்:

ஆசிரியர்: த சே உமாபதி, M. A., L. T.

| | | | |
|---|---|---|---|
| ஏழாம் வகுப்பு | 2 0 0 | 3 | 18-5-'50 |
| எட்டாம் வகுப்பு | 0 0 0 | 3 | 18-5'-60 |

*இந்த இரண்டு புத்தகங்கள் மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் தபால் செலவு உள்பட ரூ. 2-00 M. O. அனுப்பவும்.*

## புதுமுறை சங்கக் கணிதம்

V. S. லீலா, B. A. B. T.,

V. K. சேஷாத்திரி B. A., L. T.

| | | | |
|---|---|---|---|
| ஏழாம் வகுப்பு | 1 4 0 | 2 | 30-4-'58 |
| எட்டாம் வகுப்பு | 1 4 0 | 5 | 9-4-'58 |

*இந்த இரண்டு புத்தகங்கள் மட்டும் மாதிரிப் பிரதி வேண்டுவோர் தபால் செலவு உள்பட ரூ. 1-25 M. O. அனுப்பவும்.*

## சமூகப் பாடப் பயிற்சி நூல்

| | |
|---|---|
| ஆறும் வகுப்பு | 0 14 0 |
| ஏழாம் வகுப்பு | 0 10 0 |
| எட்டாம் வகுப்பு | 0 10 0 |

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌவுஸ்

94-95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை-1.



**Edited Printed and Published by P. VEERARAGHAVAN, at Venkatesan Press 2/65, Broadway, Madras-1.**